தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்.

ள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 3 | சென்னை | 8—12—56 | சனிக்கிழமை | இதழ் 15

★ எழுத்து வந்த கதை ★

★ டாக்டர் அ. சிதம்பரநாதரின் திறமிக்க ஆய்வு! ★

"கலையும் தமிழும் கற்றுத் தேர்ந்த, சிலரில் ஒருவர் சிதம்பர நாதர்" - என்று போற்றிப் புகழத் தக்கவர், தமிழ்ப் பேராசிரியர், டாக்டர் அ. சிதம்பரநாதன், எம். ஏ., பி. எச். டி. அவர்கள். அழகப்பா கல்லூரி மலர் ஒன்றில் வரைந்த இக்கட்டுரையை நாடு முழுதும் அறியவேண்டும் என்பதற்காக இங்கு பிரசுரிக்கிறோம். (ஆ-ர்.)

எழுத்து என்பது எழுதப் டுவது என்ற பொருளுடை து. எழுத்து என்றாலோ, எழுது ல் என்றாலோ நாம் அனைவ ம் ஒரு வரிவடிவத்தை உடனே னைக்கிறோம். எழுத்து என்ற ம், அச்சடித்த எழுத்தும், மை கொண்டு பேனாவால் எழு ப்பட்ட எழுத்தும், சுண்ணாம் த் துண்டு கொண்டு கரும் லகையில் எழுதப்பட்ட எழுத் ம், குச்சியினால் சிலேட்டில் எழுதப்பட்ட எழுத்தும், எழுத் தாணியால் ஓலையில் எழுதப் ட்ட எழுத்தும் விரைவில் நம் ண்முன்னே தோன்றிவிடுகின் . எழுத்து என்றதும், இந்த எழுத்துக்களைப் பற்றி நாம் இன்று எளிதில் நினைத்துவிடு றோம். ஆனால், நம்முடைய தாதையர்கள் உலகில் எந்தத் திசையில் இருந்தவராயினும் அவரெல்லாம் எழுத்து இன் து என அறியமாட்டாது இருந்த நெடுங்காலம் உண்டு என்பதை அறிதல் வேண்டும். ஆதியில், மனிதன் நாம் எழுது று போல எழுதுதற்குக் கற் க்கொண்டவன் அல்லன். காட் லும் வெளியிலும் மனிதன் முதலில் அலைந்து திரிந்து பல ஒலிகளை வாளா எழுப்பி, நாளடைவில் அவ்வொலிகளுக் ப் பொருள் உண்டாக்கிக் கொண்டான். சமுதாயக் கூட்டுறவால், சமுதாய முயற்சியால் பேசும் மொழி நாளடைவில் எழுந்தது. அப்பேச்சினை, அந்தச் சொற்களை எழுதிக் காட்டத் தலைப்பட்ட காலம் பிந்தியேதேயாகும்.

புலி வடிவத்தைக் கண்டவுடனே புலி யென்றே கிலி பிடித்த மக்கள் முற்காலத்தில் மிகுதியாக வாழ்ந்திருத்தல் வேண்டும். அந்தக் காட்டுமிராண்டிக் காலம் கழிந்த பிற்பாடு, விலங்குகளை விரட்டி யடித்தல் விலங்குகள் போன்று வடிவம் வரைவதால் இயலும் என மக்களிற் சிலர் நினைக்கலாயினர். அன்றி, விலங்குகளைப் போல வரைவதால் அவற்றைத் தம் பக்கம் வசப்படுத்திக் கொள்ளுதல் இயலும் என நம்பியோரும் உண்டு. உதாரணமாக, புலி போன்ற வடிவத்தைத் தமது ஆயுதத்திற் செதுக்கிக் கொள்வதால் புலியாகிய பகையைத் தவிர்ப்பதற்கு வழிகண்டதாக நினைத்த மக்கள் உண்டு. இந்த நிலை மாறி, புலியென்ற வடிவம் வரைந்தால் புலியென்ற பொருளைக் குறிக்கிறோம், புலியென்ற ஒலியைக் குறிக்கிறோம் என்ற எண்ணம் மக்கட்கு எழுதற்கு எத்தனையோ நெடுங்காலம் ஆகியிருத்தல் வேண்டும்.

மக்கள் தாம் தாம் கருதுகின்ற பொருள்களின் வடிவத்தை வரைதற்கு முன்னால், அப்பொருள்களைக் குறிக்க அப்பொருட்களை அப்படியே கொடுத்துவிட்ட நிலையொன்று உண்டு என அறிகிறோம். உதாரணமாக, பெர்சியா தேசத்து மன்னன் டரையஸ் என்பானுக்குச் சீத்தியர்கள் ஒரு தூது அனுப்பினதாக ஹெரொட்டஸ் என்னும் சரித்திர ஆசிரியர் குறிப்பிட்டிருக்கிறார். பகைவர்கள் அஞ்சியோடிப் பதுங்காவிட்டால் இறந்துபடுவர் என்பதே அத்தூதின் செய்தி. ஆனால், இஃது எழுத்தில் எழுதப்பட்டதன்று. ஓர் ஆள் வசம் தவளை, எலி, பறவை, அம்புகள் ஆகியவை அனுப்பப்பட்டன. இவைகுறித்த கருத்து என்ன என்றால், பகைவரெல்லாம் தவளைகள் போலத் தண்ணீருட் பதுங்காவிட்டால், எலிகள்போல வளைகளுள் நுழையாவிட்டால், பறவைகள் போல விண்ணிடைப் பறக்காவிட்டால் அம்புகளாற் கொல்லப்படுவர் என்பதே. எனவே, எழுத்துவழியே கருத்தினைப் புலப்படுத்த மக்கள் கற்றுக் கொள்ளுதற்கு முன்பு அவ்வப் பொருட்களை அறிகுறி வகையான் ஆண்டனர் என்பது விளங்கும்.

இவ்வாறெல்லாம் பலமுறைகளில் தட்டுத் தடுமாறிய பின்பே, கருத்தைத் தெரிவிக்க எழுத்து தக்கதொரு கருவியென்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கும். அந்த எழுத்துத் தானும், முதலில் சித்திரங்களாகவே இருந்தன எனச் சொல்லப்படுகின்றது. தன் முன்னே நிகழும் ஒரு நிகழ்ச்சியைக் காணுகின்ற பண்டை மனிதன் அவ்வாறே அதனை ஒருவாறு படமெழுதிப் பார்த்திருப்பான். உதாரணமாக, எகிப்து தேசத்திற் காணப்படும் ஓர் ஓவியத்தில் முட்டை வடிவமான ஓர் அடிநிலத்தில் சில செடிகள் காணப்படுகின்றன; அந்த அடிநிலத்திலிருந்து கிளம்புவது போல உள்ள ஒரு மனிதன் தலை உண்டு; அவனுடைய தலையை ஒரு கயிற்றினால் பருந்து ஒன்று பற்றிக் கொண்டிருக்கிறது. இத்திரண்ட ஓவியம் ஒரு கதை சொல்லுகிறது. பாப்பிரஸ் என்னுஞ் செடிக்குப் பெயர்போன நைல் ஆற்றின் பிரதேசத்தில் வாழ்ந்த புராதன மக்களை எவனோ ஒருவன் வென்று அரசனாயினான் என்பது அக்கதை. இவ்விதம், படத்தில் உள்ள வடிவங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு நிகழ்ச்சியைக் குறிக்கின்ற பாங்கு ஸ்காண்டினேவியா, மக்களிடத்திலும், அமெரிக்கப் பூர்வீகர்களிடத்திலும் உண்டு.

எழுத்து வளர்ந்த வரலாற்றின் அடுத்த நிலை, படநிலையிலிருந்து அது கருத்தொத்த வடிவெய்திய நிலை. படத்தின் தொகுதி திரண்ட ஒரு கருத்தைத் தெரிவிக்கப் பயன்பட்டதற்குப் பதிலாக, ஒவ்வொரு தனித்தனிப் பொருளை நேர்முகமாகக் குறிப்பதாகக் கருதப்படலாயிற்று. உதாரணமாக, எகிப்து தேசத்தில் அமைந்த ஒருவகை எழுத்தில், கண்ணின் உருவம் கண் என்ற பொருளையும், வட்ட வடிவமொன்று ஞாயிற்றையும் பிறை வடிவம் திங்களையும் குறிப்பதாகக் கொள்ளப்பட்டன. இவ்வண்ணம் தீட்டுதலால் ஒரு நன்மை உண்டு. ஒரு மொழி மாந்தரே யன்றியும் பிறமொழிகள் பேசும் மக்களும் இவ்வடிவங்களைக் கண்ட மாத்திரத்தில் பொருள் இன்னது என்று அறிந்து கொள்ளுவர். ஆயினும், சில இடர்ப்பாடுகளும் உண்டு. ஒவ்வொரு படமும் ஒவ்வொரு பொருளின் நிலையை அல்லது செயலைக் காட்டக் கூடுமேயல்லாது, எண்ணினையோ வேற்றுமையையோ காலத்தையோ காட்டுதல் இயலாது. எனவே, பல்வேறு இலக்கணக் கருத்துக்களைத் தெரிவித்தல் இவ்வகை எழுத்தால் இயலாது. அன்றியும், பிழம்புணர்த்தலாகாப் பொருள்களாகிய அன்பு, அறிவு, நட்பு, பகை ஆகியவற்றை நேரே உணர்த்தக்கூடிய படம் இல்லாததால், நாளடைவில் பிற பொருள்களை உணர்த்தும் படங்களே இவற்றிற்குப் பயன்படுத்தப்பட்டன. உதாரணமாக, பல மாடுகளின் வடிவம் "செல்வம்" என்ற பொருள் உணர்த்துவதாகக் கொள்ளப்பட்டது; கைகள் கோத்திருத்தல் "நட்பு" என்பதைக் காட்டுவதாகக் கொள்ளப்

— 10-ம் பக்கம் —

காதலர் உலகில் கண்ணும் நெற்றியும்

தமிழ் இலக்கியங்களில் பெண்பாலாரைப் பற்றிக் குறிப்பிடும்போதும், பெண்பாலாரை அழைக்கும்போதும் பெரும்பாலும் அவர்களுடைய கண்ணழகையும் நெற்றிச் சிறப்பையும் சேர்த்துக் கூறக் காணலாம். கண், நெற்றி இவற்றிற்கு அடுத்துக் கூந்தலும் பிற உறுப்புக்களும் சிறப்பிக்கப்படுகின்றன.

பெண்களின் கண்களை அடிப்படையாகக் கொண்டு மழைக்கண்ணாள், தடங்கண்ணி, கயற்கண்ணி என்றெல்லாம் பாராட்டி அழைப்பர். பெண்களின் நுதலை (நெற்றியை) அடிப்படையாகக் கொண்டு பிறை நுதலாள், நறு நுதலாள், நன்னுதலாள் என்றெல்லாம் பாராட்டி அழைப்பர். இவ்வாறு கண்ணும் நெற்றியும் உவமையாலும், உருவகத்தாலும், அடைமொழியாலும் சிறப்பிக்கப்படும் விதமே தனி! இலக்கிய நயத்தின் எல்லையையே இவ்வருணனைகளில் காணலாம்.

கலித்தொகையில் ஒரு குறிஞ்சிப் பாடல் தொடங்குகிறது, "கயமலர் உண்கண்ணாய்!" என்று. நீர்ப்பூப் போலக் குளிர்ந்த, மைதீட்டிய (அல்லது கண்டார் உயிரை உண்ணும்படியான) கண்களை உடையவளே!" என்பது இதன் பொருள்.

"அல்குறு பொழுதின்
தாதுமுகை தயங்கப்
பெருங்காட்டு உளரும்
அசைவளி போலத்
தண்ணிய கமழும்
ஒள்நுத லோயே!"

இங்ஙனம் ஒரு குறுந்தொகைப் பாடல் தொடங்குகிறது. "இரவு நேரத்திலே அகன்ற முல்லைக் காட்டின்கண் அரும்புகள் மலர்ந்து விளங்க, அவற்றைத் தடவி வருகின்ற தென்றலின் மணம் போலத் தண்ணென மணங்கமழும் ஒள்ளிய நெற்றியையுடைய தலைவி!" என்பது இதன் பொருள். இவ்வாறு எத்தனையோ எடுத்துக்காட்டுகள் காட்டலாம். தமிழிலக்கியத்தில் பெண்மை குறிக்கப் பெறும் இடங்களில் நூற்றுக்கு எழுபத்தைந்து பகுதியில், ஒன்று கண், அல்லது நெற்றி இடம் பெறுகிறது!

ஏன், கண்ணுக்கும் நெற்றிக்கும் இவ்வளவு சிறப்பு? தமிழ் மக்கள், வாழ்வின் அடிப்படை உண்மைகள் ஒவ்வொன்றையும் அறிந்து அனுபவித்துக் கூறியவர்கள். எதனையும் பொருளின்றி எடுத்தாண்டிருக்க மாட்டார்கள். காதல் உலகில் கண்ணும் நெற்றியும் தலையாய உணர்வுடையன. இதனை மிகத் தெளிவாகத் திருக்குறள் எடுத்துக்காட்டுகிறது. உறுப்புநலனழிதல் (124) என்ற காமத்துப்பால் அதிகாரத்தில் இறுதியாக உள்ள மூன்று குறட்பாக்களில் கண் உணர்வின் நுண்மையையும், நெற்றியுணர்வின் அருமையையும் காதலுணர்வைப் பகிர்ந்து கொள்வதில் இவ்வுறுப்புக்களுக்கிடையேயுள்ள போட்டியையும் திருவள்ளுவர் தெளிவு படுத்துகிறார். காதலினால் உள்ளத்தில் உடலில் பொதுவாக நிகழும் மெய்ப்பாடுகளை வகுத்துரைத்ததுண்டு. தனி உறுப்புக்களின் மெய்ப்பாட்டையும் எடுத்துக் காட்டும் சிறப்பைத் தமிழிலக்கியங்களிலே தான் காணுகிறோம். மேற்கூறிய மூன்று திருக்குறள்களும் வியத்தற்குரிய முறையில், ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டிருக்கின்றன. ஏனெனில் வேறெவ்விடத்தும் தொடர்புபடப் பொருள் தரும் குறள்களைக் காண்பது அரிது.

2

முதலில் காதல் வாழ்வைத் தொடங்கி வைப்பது கண்கள். அவனைப் பார்க்கின்றாள்; பாராதவனைப் போலப் பார்க்கின்றாள், கடைக்கண்ணால் நோக்குகின்றாள்—அவனும் அவளை விரும்பான் நோக்கிப் புன்னகை பூக்கின்றான். அவன் பார்த்ததும், அவள் கண்கள் நிலம் நோக்கிச் சாய்கின்றன. ஆயினும் அவள் முகத்திலே ஒரு புன்னகை பூத்து மறைகிறது. ஒரு பொலிவு தோன்றி மறைகிறது. 'மலராது மணம் பரப்பும் மலர்போல', 'புலராது ஒளிபரப்பும் பொழுது போல' அப்புன்னகை உட்பொருளுடையதாய் விளங்குகிறது.

இதை அடுத்து அவளிடம் நிகழும் மெய்ப்பாடு என்ன? தன்னை அவன் நோக்குவதைப் பாராமல் பார்த்து மகிழ்ந்த அவள், முன்னறியாப் புதிய உணர்விலே மூழ்குகிறாள். எழுத்தாளர்கள் குறிப்பிடுவது போல, அவள் உடலிலே 'மின்சாரம்' பாய்கிறது. அதன் பயனாக அவளுடைய நெற்றி வியர்த்துப் போகிறது. அவள் உணர்வு முந்தியதா? நெற்றி வியர்வை முந்தியதா! என வேறுபாடு அறிய முடியாவண்ணம் அவ்வளவு விரைவில் வியர்த்துவிடுகிறது. பிறகு உடலெங்குமே அவ்வியர்வை பனிக்கிறது. அச்சம், சினம், மகிழ்ச்சி அனைய உணர்ச்சி நிலைகள் அளவு மீறிப் போகும் காலத்தில் நெற்றி வியர்த்துப் போவது மனித உடற் கூற்றின் இயற்கை. இங்கே தலைவனைச் சந்திக்கும் தலைவி முன்னறியாப் புதுஉணர்வில் மூழ்குகிறாள் ஆதலால் நெற்றி வியர்த்துப் போகிறது.

தலைவன் கன்னம் கன்றிச் சிவக்குமுன், காதல் மொழிகள் இனிக்குமுன் என்ன செய்கிறான்? தலைவியின் நெற்றியையன்றோ நீவுகிறான்; அதிலேயன்றோ புதிய மணம் முகர்கின்றான்; அவளை 'நறு நுதலாய்!' (மணம் பொருந்திய நெற்றியை உடையவளே) என்றன்றோ அழைக்கின்றான்!

இவ்வாறு காதலர் சந்திப்பில் 'புகுமுகம் புரிதல்' முதல் மெய்ப்பாடாகவும், 'பொறி நுதல் வியர்த்தல்' இரண்டாம் மெய்ப்பாடாகவும் நிகழும் எனத் தொல்காப்பியம் வரையறுத்துக் கூறுகிறது. முதல் மெய்ப்பாடு கண்களுக்கு, அடுத்தது நெற்றிக்கு! இங்கேதான் கண்ணுக்கும் நெற்றிக்கும் உணர்வுப் போட்டி துவங்குகிறது. சமயம் பார்த்து எதிரியைத் தோற்கடிக்கும் திறமைசாலியாக, நெற்றி நடந்து கொள்கிறது. காதலுணர்வில் இந்தக் கண்களுக்குத் தன்னை விட முதலிடமா என்று நெற்றி வருந்திக் கொண்டிருக்கிறது. சமயம் வந்ததும் அந்தக் கண்களை வென்று காட்டுகிறது நெற்றி!

3

தலைவன் நெடுநேரம் தலைவியுடன் அளவளாவி யிருந்தான். இரவு போனதே தெரியவில்லை. 'நில்லாய் இரவே நெடிதென்று' தான் அவர்கள் வேண்டினார்கள். இரவு நிற்குமா? கணப்பொழுது போல் பறந்துவிட்டது. பொழுது புலரும் வேளை. 'இனி அவன் பிரிந்துவிடுவான்' என்று அவள் உள்ளம் உணரத் தொடங்கிவிட்டது. அதற்கேற்ப அவனும் காற்றிடைப் புகாமல் தழுவியிருந்த நிலையில் சிறிது அசைந்தான். கைகளை எடுக்கத் தளர்த்தினான். அவ்வளவில் அவள் நெற்றி வெளுத்துப் போய்விட்டது. இனி அவன் பிரிந்துசென்றபிறகு 'வான்மழை இழந்த வளநாட்டுப் பயிர்போல' அவள் வாடி மெலிந்து நிறம் மாறி வருந்துவாள் என்பதற்கு முன்னெச்சரிக்கையாக முதலில் நெற்றி நிறம் மாறியது. இவ்வாறு பிரிவுத் துயரால் நிறம் மாறி வாடி மெலிவதைப் பசலைநோய் என்று கூறுவர்.

தழுவிய கைகளை
ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்.
(குறள் 1238)

இக்குறளில் தலைவன் தழுவிய கைகளைச் சிறிது தளர்த்த, மேலே எடுத்த அளவில் பேதையின் நெற்றி பசப்புற்றதுஎன்று சொல்லப்படுகிறது. பிறகு அவன், தழுவிய கைகளை உண்மையிலேயே தளர்த்தினான். இதுவரை காற்றிடைப் புகாதிருந்த அவர்கள் முயக்கத்திற்கிடையே, இப்போது காற்றுப் புகுந்து சென்றது. உடனே அவளது மழைக் கண்கள்—மழைபோல் குளிர்வுடைய கண்கள் பசலை நோயுற்றன.

முயக்கிடைத் தண்வளி
போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்.
(குறள் 1239)

தழுவிய நிலையில் சிறிது தளர்ந்ததனால் இடையே குளிர்காற்றுப் புக, பேதையின் மழைக்கண்கள் பசலையுற்றன என்பது அதன் பொருள். சந்திக்கும்போது கண்ணுக்கு முதலிடம்; நெற்றிக்கு இரண்டாம் பரிசு. பிரியும் போதோ நெற்றி முதற்பரிசைப் பெறுகிறது. கண்கள் இரண்டாம் பரிசே பெறுகின்றன. ஏனெனில் அவன் பிரிவதை 'அனிச்சைச் செயலால்' முன்கூட்டியே உணர்ந்து நெற்றி பசலை நோயடைகிறது. அவன் பிரிவது உறுதியாகிக் காற்று இடையே புகுந்த பிறகே கண்கள் பசப்புறுகின்றன. உறுப்புக்களுக் கிடையேதான் எத்துணைப் போட்டி, காதலை உணர்வதில்!

இதனுடன் இப்போட்டி முடிந்திருந்தாலும் நாம் பாராட்டுவதற்கில்லை. அவன் பிரிந்து சென்ற பிறகு அவள் கண்களில் நீர் ஆறாகப் பெருகுகிறது. எந்த நேரமும் அவன் நினைவினால் அழுது கொண்டிருக்கிறாள். பிரிவுத் துன்பத்தை முதலிலறிந்தது நெற்றி என்றாலும், அத்துன்பத்தை மிக அதிகமாக அனுபவிப்பன கண்களே யல்லவா! இக்காட்சியைத் திருவள்ளுவர் நயம்படக் கூறுகிறார். தனக்கும் நெற்றிக்கும் ஏற்பட்ட உணர்வுப் போட்டியில் நெற்றி முதற் பரிசு பெற்றுவிட்டதே என்ற வருத்தத்தினால்தான் கண்கள் மிகவும் வருந்தி அழுகின்றனவாம்!

கண்ணின் பசப்போ
பருவரல் எய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு.
(குறள் 1240)

கண்ணின் பசலைநோய், நெற்றி முந்திக் கொண்டு விட்டதையறிந்து, பெருந் துன்பம் அடைகிறது என்பது இதன் பொருள். உறுப்புக்களின் உணர்வையும் மெய்ப்பாட்டையும் புலப்படுத்துவதிலே கூட அல்ல, அதனையும் காவிய நயம்படக் கூறுவதினாலே தான் நாம் வியப்படைகிறோம். பெண்ணாகப் பிறவாத கவிஞர்களும் பெண்களின் மெய்ப்பாடுகளை இங்ஙனம் படம் பிடித்துக் காட்டும்போது, நம் வியப்பும் பன்மடங்காகிறது!

—தமிழண்ணல்.

மணத்திற்கும், மனத்திற்கும் தொடர்புண்டு



எங்கும் கிடைக்கும்.

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் ; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 3 ‖ 8—12—56 ‖ இதழ் 15

விடுகதையல்ல!

''உலகத்திலுள்ள எல்லாக் கட்சிகளேக் காட்டிலும் காங்கிரஸ் கட்சி ஒரு புதிய ஜீவசக்தியை அடிக்கடி சேகரித்துக்கொண்டு வருகிறது;

"ஆளுகின்ற ஒரு கட்சிக்கு எதிர்ப்பு இருக்கிறது என்ருல், ஏதாவது ஒரு மூலேயில் இருந்து யாராவது ஒரு கூட்டத்தினர் எதிர்ப்பார்கள் - இது இயற்கை. ஆனல் காங்கிரஸ் கட்சிக்கு விரோதமாக வளர்ந்திருக்கிற எதிர்ப்பு இருக்கிறதே அது விசித்திரமானது.

"மிராசுதார்கள் காங்கிரசை எதிர்ப்பதற்கு வரிந்து கட்டிக் கொண்டு நிற்கிருர்கள்; பண்ணே யார்கள் என்று சொல்லிக்கொள்வோரும் காங்கிரசை எதிர்ப்பதற்குத் தயாராக இருக்கிருர்கள். பாட்டாளிகள், தொழிலாளிகள் என்போரும், நாட்டைப் பிரிக்கவேண்டும் என்றுசொல்லுகிற வகுப்புத்துவேஷிகளும் காங்கிரசை எதிர்க்கிருர்கள்; இப்படி, பல திசைகளிலிருந்து காங்கிரசுக்கு எதிர்ப்பு இருந்தும், காங்கிரஸ் கட்சிதான் வெற்றி பெறும்.''

--ஒரு பெரிய மனிதர்-இடைக்காலத்தில் காங்கிரசிலே வந்து புகுந்துகொண்டு நல்ல காங்கிரஸ்காரர்களேத் துரத்திவிட்டு அந்த இடத்தில் குந்தி இருக்கும் ஒரு திடீர்த் தலேவர்,—காங்கிரஸ் இயக்கத்தைப் பற்றி இவ்வாறு புகழ்ந்திருக்கிருர்.தேவாரம் பாடுவோரும், திருவாசகத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருப்போரும் கண்களே மூடிக்கொண்டு தியானத்தில் இருந்தபடி பாடுவதுபோல், அந்தக் காங்கிரஸ்காரர் மெய்மறந்து, மனது உருகி, காங்கிரசினுடைய கீர்த்தியை இந்த வடிவத்தில் தந்திருக்கிருர்.

காங்கிரஸ் கட்சிக்கு இவ்வளவு எதிர்ப்பு இருந்தும் அதுதான் வெற்றிபெறும்என்பதை'தோழர் தேசியம்' ஒரு புரியாத விடுகதை என்று; கருதுகிருர், ஆச்சரியப்படுகிருர், மெய்மறந்து தோத்திரம் செய்கிருர்.

உண்மையில் இது விடுகதை தாஞ? நாட்டின் முக்கால் பகுதியினர், ''வேண்டாம் இந்தக் கட்சி'' என்று சொன்னபோதும் கூட அது வெற்றிபெற்றுவிடும் என்று காங்கிரஸ்காரரே சொல்லுவது மிக மிகக் கேவலமாகும். வாக்குப் பெட்டிகளுக்குள் மக்கள் ஓட்டுப் போடுகிருர்கள், அதுவும் வயது வந்தவர்கள் ஓட்டுப் போடுகிருர்கள் என்று அவர் நெஞ்சாரக் கருதியிருப்பாரேயாஞல் இவ்வாறு பேசியிருக்கமாட்டார். ஒரு கட்சியை, அதுவும் ஒரு நாட்டினுடைய அரசியல் திட்டத்தைத் தன் கைக்குள் வைத்துக் கொண்டு, இந்த நாட்டினுடைய தலேவிதியை நிர்ணயிக்கும் 'ஆளும் கட்சியை'—வேண்டாம் வேண்டாம் என மக்கள் ஒதுக்கித் தள்ளுகிருர்கள் என்று வெளிப்படையாகச் சொல்லிக் கொள்வதே அரசியல் அநாகரிகமாகும். அதையும், மிஞ்சி இவ்வளவு எதிர்ப்பு இருந்தும், நான் ஜெயித்து விடுவேன் என்று சொல்லுவது அரசியல் 'ரௌடித்'தனமாகும்.

உலகத்தில் இப்படி ஒரு நிலேமையை யாரும் பார்த்திருக்க மாட்டார்கள். ஒரு புனிதமான கட்சி, உலக உத்தமஞல் வளர்க்கப்பட்ட கட்சி, இவ்வள்வு விரைவில் செல்வாக்கை இழந்து, சந்து முனேகளிலெல்லாம் அதனுடைய ஊழல்களேப் பற்றி, கற்ருேரும் மற்ருேரும் வாலிபர்களும் முதுகிழவர்களும் பேசுகிருர்கள் என்ருல், உண்மையான காங்கிரஸ்காரர்கள் காவி உடுத்திக்கொண்டு, காட்டிலே இருக்கும் பர்ணசாலேக்கு ஓடி இருக்கவேண்டும்! தேர்தலேப் பற்றிப் பேச அவர்களுக்கு யோக்யதையே இல்லே.

ஆனல் இங்கே?

"எவ்வளவு எதிர்ப்பு இருந்தாலும் ஜெயித்துவிடுவோம்" என்கிருர்கள். இதனுடைய உட்பொருள் என்னவென்று கண்ணியவான்களுக்குத் தெரியாது; நீதிமான்களுக்குப் புரியாது.

புதிய காங்கிரஸ்காரர்களுக்குத் தான் வெளிச்சம்! ★

★ ● ★

பெரியார் யார்?

மனிதன் பாறையின் உச்சியிலே அமர்ந்திருந்தான். உயர்ந்த, செங்குத்தான பாறை. கீழே, ஆழப்படுகுழி. பாறை தலே நிமிர்ந்து நின்றது. மனிதன் அதன்மேல் அமர்ந்திருந்தான். சுற்றுமுற்றும் விழிகளேச் சுழலவிட்டான். எங்கும் அழகு சிரித்தது. விண் தொடும் குன்றும், பெருங்கிளே விரித்த மரங்களும் காட்சியளித்தன. இவற்றையெலாம் நாம் அடக்கியாள்கின்ருேம் என்ற செருக்கு மனிதன் நெஞ்சிலே தோன்றியது.

அப்போது ஒரு சிறு கட்டெறும்பு பாறையில் ஊர்ந்து கொண்டிருந்தது. அதை மனிதன் பார்த்தான். நகைப்பு வந்தது அவனுக்கு. "எத்தனே சிறிய உயிர்! என் சிறு விரலுக்கு ஆற்ருதே! இம் மாபெரும் உலகில் வாழ இதற்கென்ன தகுதி யிருக்கின்றது!" என்று தனக்குள் எண்ணிக்கொண்டான்.

எறும்பு நகர்ந்து கொண்டிருந்தது. மனிதன் சிறிது குனிந்து அதனே வாயால் ஊதினுன். எறும்பு அலேப்புண்டது. மேலும் ஊதினுன்; எறும்பு தடுமாறியது, தள்ளாடியது. அவன் வாயால் ஊத ஊத எறும்பு நகரமுடியாமல் தடுமாறுவதும், அலேபடுவதும், தலேகீழாகப் புரண்டு, பின் நிமிர முயல்வதுமாகத் திண்டாடியது. மனிதன் சிரித்துக் கொண்டான். "இதுவும் ஒரு உயிரா!" என்ற எண்ணம், உள்ளத்தில் எழுந்தது. தன்னே யறியாமலே மனிதன் தனது உடலேப் பார்த்துக் கொண்டான். திரண்ட தோள்கள்! அகன்ற மார்பு; ஒளிவீசும் முகம்; இதுவல்லவா பெருமிதத் தோற்றம்! இந்தச் செருக்கில் மனிதன் தனது சுட்டுவிரலால் எறும்பினே வேகமாகத் தள்ளிவிட்டான். எறும்பு, பாறை விளிம்பினின்றும் தலேகீழாக உருண்டு, கீழிருந்த படுகுழியை நோக்கிச் சென்றது. காற்றில் அலேப்புண்ட ஒரு தூசிபோல் சென்றது. மனிதன் சிரித்துக் கொண்டான்.

காலம் நடந்தது; மனிதன் சிந்தனேயை வானத்தை நோக்கி அலேயவிட்டுக் கொண்டிருந்தான். திடீரென்று பெருங்காற்று ஒன்றெழுந்தது. மனிதனின் கால் வழுகியது. மறுகணம் மனிதன் பாறை உச்சியினின்றும் உருண்டான்; தலேகுப்புற உருண்டான்; படுகுழி நோக்கி உருண்டு வந்து விழுந்தான். மண்டை சிதறியது. முதுகெலும்பு முறிந்து விட்டது. திரண்ட கைகால்கள் சிதைந்து போயின. அழகிய முகத்தில் குருதி பிறிட்டது. மனிதன் பேச்சு மூச்சற்றுக் கிடந்தான்....

அப்போது ஒரு கட்டெறும்பு, வாயிலே ஒரு புல்லரிசியைக் கவ்விக்கொண்டு, மிகவும் அமைதியாக மனிதனின் முதுகிலே ஏறி அந்தப் பக்கம் ஊர்ந்து சென்றது. ஆம், சற்றுமுன் மனிதனல் பாறையினின்று கீழே தள்ளப்பட்ட கட்டெறும்புதான் அது!

-இலனியன்.

★ ● ★

மாணவர்களே!

1957 S. S. L. C.

இந்தத் தேர்வில் நிச்சயமாக வெற்றியடைய
உற்ற துணே நூல் ஒன்றே ஒன்றுதான்!

இரட்டையர் தமிழ் வினு விடை

விலே மிகக் குறைவு. ரூ. 1-4-0 தான்.

இதுவரை ஒன்றுமே படிக்காதிருந்தாலும் இந்தத் துணே நூலின் உதவியால் சில மணி நேரத்திலேயே உங்கள் முழு வெற்றியையும் நிச்சயித்துக் கொள்ளமுடியும். உங்கள் தேவைக்கு முந்துங்கள்!

எல்லா முக்கிய வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

விபரங்கட்கு:

செல்வி பதிப்பகம், காரைக்குடி.



குருதிதான் தோய்ந்ததோ அல்லது பவளம்தான் மாறி வந்ததோ என்று எண்ணும் படியான சிவப்பு நிறம். ஆமாம்! பளபளப்பும் மென்மையும் கொண்ட ஆப்பிள் பழுத்து விட்டால் அதன் நிறம் சிவப்பு ரோஜாவையும் தோற்கடித்துவிடும். பார்ப்பதற்கு ரம்மியம் மட்டுமல்ல, உண்பதற்குச் சுவையும் தருவது. ஆனால்! அந்த ஆப்பிளினுள்ளே புழு புகுந்து விட்டால்! சிவந்து கண்ணைக் கவர்ந்து நின்ற அப்பழத்தின் மேனியிலே கருநிறம் படர்ந்து விடும்! அது மட்டுமா! பழம் சுவையிழந்து, பயனற்றுப்போகும்.

மனித மனமும் அப்படித்தான். தீய குணங்கள் இதயத்தில் குடியேறிவிட்டால், மனிதன் கேவலமான மிருகமாகி விடுகிறான். மணம் தரும் சந்தனத்தை மார்பிலே தடவிக்கொள்வதற்கு மாறாக சாக்கடை நீரிலே ஜலக்கிரீடை செய்கிறான். உள்ளத்திலே தீயகுணங்களும், தீய எண்ணங்களும் புழுப் போல குடியேறி விட்டால், பழம் போல மனமும் அழுகித் தானே விடும். எனது நண்பனின் கதையும் அப்படித்தான்.

நானும் அவனும் குழந்தை முதலே நண்பர்கள். இளமைப் பருவத்திலிருந்தே அவனையும் அவனது குணங்களையும் நான் நன்றாக அறிவேன். இன்று! அவன்—வாழ் வெனும் பாதையிலே, வழுக்கி விழுந்து விட்டவன்; இதயத்தின் விபரீத ஆசைகளால் சாவைத் தழுவிக்கொள்கிறான்; வாலிபத்தின் உணர்ச்சிகளால் அலைக்கழிக்கப் பட்டு, உருமாறிப் போனவன்; உணர்ச்சிச் சூறாவளியிலே மலர் போன்ற அவள் அடித்துச் செல்லப் பட்டு, துயரக்கடலிலே அமிழ்த்தப் பட்டான். பசுமை நிறை வயல்களும், வாவிகளும் சூழ்ந்த அந்தக் கிராமத்திலேதான் அவன் பிறந்தான். இளமை முதல் அவன் கொடூர உள்ளம் படைத்தவனாகவேதான் திரிந்தான். பண் பாடும் பறவைகளின் சிங்காரக் கூட்டை அவனது புலி நகங்கள் பிய்த்தெறியும். சிறகில்லாக் குஞ்சுகள் அவனது காலடியில் நசுக்குண்டு உயிரைவிடும். அழகு சிந்தும் மெல்லிதழ் வண்ணமலர்கள் அவனது காலடியிலே மிதிபட்டுச் சருகாகும். பத்து வயதிலே, பள்ளியிலே அமைதிக்கு அவன் தான் பகைவன். படிப்பை வெறுத்தான். அதைக் கடு விஷம் என்று கூறி விளையாட்டிலே காலம் கழிப்பான். வாலிபப் பருவத்திலே அவன் புரிந்த திருவிளையாடல்கள்! அப்பப்பா! தந்தையின் குன்றாத புகழையெல்லாம் சந்தைக் கடைகளிலே வியாபாரப் பொருளாக்கினான். உடலை விற்று வாழும், பழி பாவத்துக்கஞ்சாத, பரத்தையரின் காலடியிலே செல்வத்தையெல்லாம் கொண்டு கொட்டி நின்றான். மது வெனும் மங்கையின் கரங்களிலே, அரவணைப்பிலே, கட்டுண்டு இந்த உலகத்தையே மறந்து ஏகாங்கியாய்த் திரிந்தான்.

இருந்தும் நான் அவனை நண்பனாகவே எண்ணினேன்! அவனுக்காக, அவனது செயல்களுக்காக நான் பரிதாபப்பட்டேன்; கண்ணீருகுத்தேன். அனுக்காக இரங்கினேன்—அவனது உறுதியற்ற மனத்தில் எழுந்த எண்ணங்களின் விளைவாக நிகழ்ந்த செயல்களுக்காகப் பச்சாதாபப் பட்டேன். அறியாமை காரணமாக தீமைப் படுகுழியி விழுந்துவிட்ட அவனது நெஞ்சத்தை நினைத்து நினைத்து உள்ளம் நைந்தேன். உணர்ச்சியும் அறியாமையும் அவனைத் தீமையின் இருப்பிடமாக்கின. ஆனால்! என்றாவது ஒருநாள் அவன் திருந்தி வாழ்வான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. வாலிபப் பருவத்திலே, உணர்ச்சியெனும் சூறாவளி அடித்து வரும், தூசும், மணலும், அவனது கண்களைக் குருடாக்கி விட்டன.

நான் அவனை விரும்பினேன். அவனுக்கு இன்றும் மனச்சாட்சி இருந்த காரணத்தால். தீமை யெனும் கழுகோடு அவனது இதயப்புறா போராடுவதைக் கண்டிருக்கிறேன். மனச்சாட்சி ஓர் நீதிபதி; ஆனால் வலிவற்ற நீதிபதி. இந்த வலிவற்ற தன்மைதான் நீதியின் தீர்ப்புக்குக் குறுக்கே நிற்கிறது.

நான் அவனை நேசித்தேன். நேசம் பல உருவங்களில், அறிவு வடிவிலே, நீதியின் உருவத்திலே, நம்பிக்கையெனும் தோற்றத்திலே வருவதுண்டு. என் உள்ளத்தில் தோன்றிய நம்பிக்கை ஒளி, அவனது வாழ்வைச் சூழ்ந்துவிட்ட துயர இருள் அகன்றுவிடும் என்று கூறியது. ஆனால் கொடூரம் அன்பாக மாறியதை, அறியாமை அறிவொளியாக உருவெடுத்ததை நான் இதுவரை கண்டதேயில்லை. கதிரவன் உதித்தால் தானே தாமரையின் சிரிப்பைக் காண முடியும்!

இரவின் காலடிகளைப் பகல் பின்தொடர்ந்து சென்றது. நாட்கள் வேகமாகக் கழிந்துகொண்டேயிருந்தன. நான் அவனையே நினைத்துக் கொண்டிருந்தேன். அவன் படும் அவதியை எண்ணி எண்ணி என் இதயம் கனத்தது. இதயச் சுமை தாங்காமல் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தேன். அப்போது! அவனிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது. ''நண்பா! உடனே புறப்பட்டு வா. உனக்கு என் நண்பன் ஒருவனை அறிமுகப்படுத்தி வைக்கப்போகிறேன். அவனைக் கண்டால் உன் உள்ளம் வியக்கும். உன் எண்ணங்கள் புதுமை பெறும். ஏன்! நீயே பெருமை அடைவாய்.''

இதைக் கண்ட என் உள்ளம் மேலும் துயருற்றது. ''மிருக வாழ்க்கை வாழும் அவன் தன்னோடு கூட்டு வேறு சேர்த்துக் கொண்டான். இவன் ஒருவன் போதாதா தீமையின் உருவை எடுத்துக்காட்ட! அவனது வாழ்வுப் புத்தகத்தில் எழுதப்படாமல் இருக்கும் பக்கங்களை நிரப்பிவிட்டு அதைப் படித்துப் பார்ப்பதற்கு எனக்கு அழைப்பு அனுப்பியிருக்கிறான்'' என்றெல்லாம் என் உள்ளம் எண்ணியது.

எப்படியும் போவது என்றே நிர்மானித்தான். இருள்சூழ்ந்து கிடக்கும் அவனது வாழ்வில் எங்காவது ஒளி சிந்தாதா? நெறிகெட்டு வாழும் அவன் திருந்தி வாழமாட்டானா? என்ற எண்ணம், நான் நேரில் போனால் ஒருவேளை திருந்தி விடலாம் என்று நம்பிக்கை யூட்டியது.

நான் சென்றேன். அவனைக் கண்டேன், ஆனால் தனியாளாக! அவன் கைகளிலே ஏதோ ஒரு புத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டிருந்தான். அதைக் கண்டு வியப்புற்றேன். வியப்பைக் கண்கள் வெளியிட திகைப்போடு ''எங்கே உன் நண்பன்?'' என்று கேட்டேன். ''நான்தான் அவன்'' என்றான் அவன்.

நான் அவனிடம் கண்டறியாத அமைதியோடு உட்கார்ந்தான். பின் என்னைப் பார்த்தான். அவனது கண்களிலே புதியதோர் ஒளி வீசிக் கொண்டிருந்தது. கொடூரத்தையும், வெறுப்பையும், விகார ஆசைகளையும் வெளிப்படுத்திக் கொண்டிருந்த அவனது கண்களிலே அன்பின் ஒளி வீசியது. மிக அமைதியான குரலிலே, பேச ஆரம்பித்தான். ''நண்பா! இளமை முதல் நீ அறிந்திருந்த நண்பன், யாரோடு நீ நாளெல்லாம் விளையாடினாயோ, வாலிப வயதிலே யாருடைய தோழனாக நீ இருந்தாயோ அவன், மாண்டு மண்ணோடு மண்ணாகி விட்டான். அவனது சாம்பல் மேட்டிலே பிறந்தவன் நான். நான் உனக்குப் புதியதோர் நண்பன். என்னை ஏற்றுக்கொள்'' என்று கூறி என்னைக் கட்டி அணைத்துக் கொண்டான்.

ஆச்சரியம் அணை போட, மகிழ்ச்சிப் பெருக்கிலே நான் கேள்விக்கணைகளைத் தொடுத்தேன். ''நீ யார்? உனக்கு என்ன நேர்ந்தது? நீ எப்படி மாறினாய்? உன்னைப் பலி பீடத்திற்கு அழைத்துச் சென்ற உனது உணர்ச்சிகள் எங்கே? அவை, தாமே பலியாகி விட்டனவா? அல்லது உனது நடிப்பால் என்னை ஏமாற்ற நினைக்கிறாயா?''

அமைதியாக என்னைப் பார்த்துக் கொண்டே இருந்த அவன் பதில் சொல்ல ஆரம்பித்தான். ''நண்பா! புதியதோர் சக்தியை நான் பெற்று விட்டேன். காதல் எனதுள்ளத்தைத் தூய்மைப்படுத்தி விட்டது. பெண்ணின்மேல் நான் கொண்ட காதல் என்னைப் புனிதப்படுத்தி விட்டது. எந்தப் பெண்களை எனது உடற்பசிக்கு இரையாக்கினேனோ, எந்தப் பெண்களை எனது உல்லாச வாழ்வின் பள்ளியறைப் பதுமைகளாக எண்ணி, சல்லாபப் பொருள்களாக்கி அவர்களின் கற்பையும் மானத்தையும் பறித்தேனோ, எந்தப் பெண்களின் மலர் போன்ற இதயத்தை என் காலடியில் போட்டு மிதித்து அவர்கள் வாழ்வைச் சுருண்டு போகச் செய்தேனோ, எந்தப் பெண்களை மானமிழந்து வீதியில் திரியச் செய்தேனோ, எந்தப் பெண்களை இதயம் வெடித்துச் சாகச் செய்தேனோ, அந்தப் பெண்ணினத்திலே தோன்றிய ஒருத்தி எனக்கு வழிகாட்டினாள்; திருத்தினாள்; அன்பு செய்தாள்; காதலித்தாள்; என் வாழ்வுக்கே மாமருந்தானாள். என் குடும்ப விளக்கானாள். இனிதான் நான் உண்மையிலேயே வாழப்போகிறேன். புது வாழ்வு பெற்றுவிட்டேன். நான் புத்துயிர் அடைந்தேன் நான். ஆமாம்! எனக்குப் புத்துயிர் அளித்தவள் அந்தப் பெண் தெய்வம். அவளால் என் வாழ்வு மலர்ந்தது'' என்று குற்றம் புரிந்து கிடந்த அவனது நெஞ்சம் குமுறியழுதது.

அவனையே பார்த்துக்கொண்டிருந்தேன். கண்கள் கலங்கியிருந்தன. விழிக்கடையிலே கண்ணீர் தேங்கியிருந்தது. இதழ், புன்னகையைச் சிந்திக்கொண்டிருந்தது. கண்களிலிருந்து அன்பு ஒளி வீசிக் கொண்டிருந்தது. நான் அவனருகே சென்று, அவனைத் தழுவிக் கொண்டு, அவனது கண்ணீரைத் துடைத்தேன்.

நான் அவனிடமிருந்து புறப்பட்டேன். ஆனாலும் ''பெண்களுக்குத் துரோகமிழைத்தேன் நான். ஆனால் பெண்ணொருத்திதான் எனக்குப் புத்துயிர் அளித்து புது வாழ்வு தந்தாள்'' என்ற அவனது வார்த்தைகள் என் காதுகளிலே ஒலித்துக் கொண்டேயிருந்தன.

—சிந்தாமணி

ஓவியர்தம் கைவண்ணம்
ஒருசிலர்தாம் உணர்ந்திடுவர்!
சிற்பியர்தம் திறமதையும்
சில்லோர்தாம் அறிந்திடுவர்!
அற்புதமாம் 'புகைப்படத்தின்'
அருமைமிகு தன்மைதனை
அனைவருமே தாமறிவர்
அதிஇன்பம் கொண்டிடுவர்!

கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு
திறமையாகப் புகைப்படம் எடுக்கப்படும்.

அழகப்பா ஸ்டூடியோ,
கீழராஜ வீதி : : புதுக்கோட்டை.

★ முள்ளம் பன்றி ★

ஐக்கிய அமெரிக்காவிலுள்ள ஃபல்லோ யூனிவர்ஸிட்டி உயிரியல் பகுதியின் தலைவர் டாக்டர் ஆல்பெர்ட் ஆர். ஷேடில். அவர் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக முள்ளம் பன்றிகளை வளர்த்துச் சீராட்டி வருகிருர். அவர் கையில் ஆயிரக்கணக்கில் முள்ளம் பன்றியின் முள்போன்ற மயிர் பொத்திருக்கிறது.

"இப்படிப் பொத்திப் பொத்திப் பழக்கப்பட்டு, இப்போது அதுவே ஓர் இன்பமாக இருக்கிறதென்ருல் பாருங்களேன்!" என்கிருர் அவர்.

ஒருதரம் தற்செயலாக ஒரு முள்ளம்பன்றி வாலை ஆட்ட, அது அவர் மணிக்கட்டில் பட்டு அங்கே 50 முட்கள் அப்படியே பொத்துவிட்டன. அது வேண்டுமென்று இப்படிச் செய்வதில்லை. தெரியாத்தனமாகச் செய்துவிட்டேன் என்பதுபோல் முனகியும் அழுவதுபோல் ஊளையிட்டும் கொஞ்சவரும், அதோடு, "சரி; போகட்டும்" என்று அது செய்த பிழையைப் பொறுத்துக்கொண்டு விடவேண்டியதுதான்.

டாக்டர் ஷேடில் எப்போதும் முள்ளம் பன்றிகளோடேதான் இருந்து வருகிருர் – பிரிக்கிள்ஸ், பிளாக்கெட், பிரெளனெட், சூசி, டைக், போஸோ, ஓல்டு பில் இப்படி எத்தனையோ முள்ளம் பன்றிகளோடு. அவருக்கும் அவைகளுக்கும் பரஸ்பரம் எவ்வளவு அன்பு தெரியுமா?

அவர் செல்லமாக வளர்க்கும் முள்ளம் பன்றிகளில் ஒன்று பிங்கி. இது மயிர் உட்பட முழுக்க முழுக்க வெள்ளைவெளேர் என்று இருக்கும்; கண், பிங்க் என்னும் நீலங் கலந்த சிவப்பாக இருக்கும். சினிமாவில் படம் எடுப்பதற்காக இதை ஃபல்லோவிலிருந்து கொலராடோவுக்கு நாலு தடவை அழைத்துப் போயிருக்கிருர்கள். இந்த மாதிரி வெள்ளை முள்ளம் பன்றி இதைத் தவிர இன்னும் ஒன்றே ஒன்றைத்தான் டாக்டர் ஷேடில் பார்த்திருக்கிருராம்; வேறு எதுவும் அப்படிக் கண்ணில் பட்டதில்லையாம். 1941-ல் பிறந்தது பிங்கி. அது பிறந்த கதையே விநோதமாக இருக்கும்.

ஐக்கிய அமெரிக்க மீன், காட்டு விலங்கு இலாகாவைச் சேர்ந்த ஒருவர் விஞ்ஞான ஆராய்ச்சிக்காக முள்ளம்பன்றிகளைத் தேடிப் பிடித்துக்கொண்டிருந்தார். ஒரு நாள் இப்படி ஒரு முள்ளம்பன்றியைச் சுட்டு அறுத்துக்கொண்டிருக்கும் போது அதன் வயிற்றில் வெள்ளையாக ஒரு குட்டி தெரிந்தது. அவருக்கு ஒரே வியப்பாக இருந்தது. இதை எடுத்து நன்ருகச் சூடேற்றிச் செயற்கை முறையில் மூச்சு விடும்படி செய்தார். சற்று நேரத்துக்கெல்லாம் தானகவே மூச்சுவிடத் தொடங்கியது பிங்கி. 'இன்குபேட்டர்' என்ற உஷ்ணப் பாதுகாப்பில் இந்தக் குட்டியை வைத்தார். சில நாளைக்கெல்லாம் இது அசல் முள்ளம்பன்றியாகக் காட்சி அளித்தது. ஒரு வருஷங் கழித்து டாக்டர் ஷேடிலிடம் இதை அனுப்பிவிட்டார். இப்போது இது பெரிதாக வளர்ந்துவிட்டது.

இளமையில் முள்ளம்பன்றிகள் விளையாடிக்கொண்டே பொழுதைப் போக்கும்; வளர்ப்பவர் பின்னுலேயே பூனைக்குட்டிபோல் வந்து கொண்டிருக்கும். பிறக்கும்போதே முள்ளம்பன்றியின் முதுகெலும்புகள் நன்ருக வளர்ச்சி பெற்றிருக்கும்; கண் திறந்திருக்கும்; பல்லும் இருக்கும்; வாலைத் தூக்கி அடித்து நடமாடும். கொஞ்ச நாளில் மரமேற ஆரம்பித்துவிடும்.

சாதாரணமாக, முள்ளம்பன்றிக்கு இந்த மாதிரி முள்மயிர் 30,000 உண்டு. அதிலும் அதன் வால் பாகம் முள்மயிர் அடர்ந்து கனமாக இருக்கும். அதுதான் முள்ளம் பன்றிக்குக் குண்டாந்தடி. அதனுல் சடக்கென்று அடித்தால் போதும்; தாக்க வரும் (விலங்கு) எதிரியின் முகத்திலும் வாயிலும் கற்றை முள் மயிர் பொத்துக்கொண்டுவிடும். ஓநாய், காட்டுப்பூனை முதலிய விலங்குகளுக்கு முள்ளம் பன்றி இரையாகும். ஆனுலும் வீசல் என்ற வகையைச் சேர்ந்த ஃபிஷர் என்ற விலங்குதான் மிகவும் பக்குவமாக முள்ளம்பன்றியின் அடிவயிற்றில் தாக்கித் தீர்த்துக்கட்டிவிடும்; அந்தப் பாகம் எலும்பும் முள்ளும் இல்லாமல் மெதுவாக இருப்பதுதான் காரணம்.

முள்ளம் பன்றிக்குக் கொடும் பகையாக இருப்பவை துளைத் தெடுக்கும் புழுக்கள்தான். இவை முள்ளம்பன்றியின் உடம்புக்குள் ஏராளமாகப் பெருகிவிடும். முள்ளம்பன்றிகள் அருகிப் போவதற்கு இதுவே காரணமாக இருக்கலாம்.

அவைகளுக்கு உப்பு என்ருல் ஏன் அவ்வளவு ஆசை? மண்வெட்டிக் கைப்பிடியில் வேர்வை ஓட்டிக்கொண்டிருந்தால் ஏன் அதைக் கடித்து மெல்ல வருகின்றன?–இதற்கு டாக்டர் ஷேடில் என்ன விளக்கம் சொல்கிருர் தெரியுமா?

"என்னைப் பொறுத்தவரை முள்ளம் பன்றியினுல் இப்படித் தொல்லை ஏதும் இல்லை. நானே அவைகளுக்கு வேண்டிய உப்புக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்துவிடுகிறேன். இப்படி அந்த அளவுக்குக் கிடைத்துவிட்டால் அவை ஏன் கண்டதையும் கடித்து மெல்ல வரப்போகின்றன? அதனுல் என்ன பிரமாதமாகக் கிடைத்துவிடும்?" என்றுதான் சொல்கிருர்.

காட்டில் அகப்பட்டுக்கொண்டு யாராவது சோறு தண்ணீர் இல்லாமல் திண்டாடும்போது முள்ளம் பன்றி மெதுவாக வந்து எளிதில் சிக்கிக்கொண்டு அவர்கள் கையால் மடிந்து, அப்புறம் உணவாகப் பயன்படும்.

"அதை எப்படிச் சமைப்பது, என்ன மாதிரி ருசி இருக்கும்?" என்று யாரோ கேட்டதற்கு டாக்டர் ஷேடில், "அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் நண்பர்களைச் சாப்பிடுகிற வழக்கமில்லை" என்று பட்டென்று பதில் கொடுத்தார்.

நமக்குள் அவரவர் சுபாவம் மாறுபடுகிற மாதிரியே முள்ளம் பன்றிகளுக்குள்ளும் உண்டு; குரல், போக்கு, குணம் எல்லாங்கூட அப்படித்தான்.

டாக்டர் ஷேடிலுக்கு முள்ளம் பன்றிப் பாஷை நன்ருகத் தெரியும். காட்டுப்பக்கம் போக நேரும்போது அவர் இப்படி அவைகளின் பாஷையில் 'பேச' ஆரம்பித்தால் போதும்; சற்று நேரத்துக்கெல்லாம் அவர் பக்கமாக ஏதாவது முள்ளம்பன்றி மெதுவாக வந்து சேரும். அப்போது அவர்சும்மா இருந்தால் அவருடைய காலருகில் வந்துநிற்கும்.

ஆனுல் அங்கே நிற்பது மனிதன் என்று தெரிந்துவிட்டால், தான் ஏமாந்துவிட்டதை உணர்ந்து உடனே நழுவிவிடும்.

கோடையில், மே மாச வாக்கில் முள்ளம்பன்றி ஒரே குட்டி போடும். குட்டி 12 முதல் 20 அவுன்ஸ் நிறை இருக்கும், பிறந்தது முதலே அவை மிகவும் சூடிகையாக இருக்கும். தம்மால் முடிந்த மட்டும் ஓடி ஆடி உலாவும். இருந்தாலும், இரண்டு மூன்று மாச காலம், தாய், இவைகளைக் கவனித்துக்கொண்டிருக்கும்.

ஒரு சமயம் டாக்டர் ஷேடில், காட்டில் ஒரு முள்ளம்பன்றிக் குட்டியைக் கூவி அழைத்தார். அப்போது அவர் படுத்துக்கொண்டிருந்தார். அது நேராக வந்து அவர் முகத்தின்மேல் முட்டுவது போல் உராய்ந்தது. 12 முதல் 15 வருஷகாலம் இவை வாழும் என்பது டாக்டரின் கருத்து. இளவேனிலின்போது பழைய மயிரை உதிர்த்துவிடும். ஒரு மயிர் உதிர்ந்தால் அது வளர எத்தனை நாளாகும்? "பல மாச காலமாக இதைத்தான் கவனித்து வருகிறேம்" என்கிருர் டாக்டர்.

நம் துணியில் பட்டதும் அந்த முள் மயிர் நம் சதையில் ஏறிவிடும்; உடனே வெகு எளிதில் முள்ளம் பன்றியின் உடம்பிலிருந்து பெயர்ந்து வந்துவிடும். அதன் முதுகில் முள்போல் குத்திட்டு நிற்கும் எலும்பு போன்ற செதிள்குத்தினுல் உடம்புக்குள் ஏதாவது கெட்டியான பாகம் தடுத்தாலொழிய அது நிற்காது; தசையைப் பெயர்த்துக் கொண்டுதான் வெளியில் வரும்.

ஒரு சமயம் இப்படி ஒரு குட்டியின் செதிள் டாக்டர் ஷாடிலின் முழங்கை அடிப்பாகத்தில் 4 அங்குலத்துக்கு ஏறிவிட்டதாம். ஏழு மணி நேரங்கழித்துச் சதைக்குள் நன்ருக ஏறிவிட்ட பிறகுதான் அவருக்கு அது தெரிந்ததாம். சிமிட்டாவைக் (ப்ளையர்ஸ்) கொண்டு அதை எடுக்கப் போனபோது செதிள் உடைந்துவிட்டதாம். சதையை அறுப்பானேன் என்று அப்படியே விட்டு வைத்துப் பார்த்தாராம். அந்தச் செதிள் துண்டு சுத்தமாக இருந்ததால் வலி ஒன்றும் எடுக்கவில்லை. முற்றின முள்ளம்பன்றியின் செதிளாக இருந்திருந்தால் அழுக்குப் பிடித்து உபத்திரவம் கொடுத்திருக்கும். இப்படிக் குத்தின 42 மணி நேரங் கழித்துச் செதிளின் நுனிப் பாகம், குத்தின இடத்திலிருந்து இரண்டு அங்குலம்தள்ளி வெளியே தெரிந்ததாம். நாள் ஒன்றுக்குச் சுமார் ஓர் அங்குல வீதம் தோல், தசைநார் இவைகளில் ஊடுருவிக் கொண்டே போயிருக்கிறது அந்தச் செதிள் என்ருல் பாருங்கள்!

டாக்டர் ஷேடில், "முள்ளம் பன்றிகளை நாமோ நம் நாயோ நெருங்குவதாயிருந்தால் கூடவே ஒரு சிமிட்டாவை எடுத்துக் கொண்டு போகவேண்டியதுதான்" என்கிருர்.

முள்ளம்பன்றிகள் பச்சைக் கறி, காய், இலை, தழை, மரப்பட்டை, சில வேர், கிழங்கு வகைகள், பாசி போன்றவைகளையே உண்டு வாழ்கின்றன. காட்டில் வாழும் முள்ளம்பன்றிகள் மாபிள், பாப்லார், எல்ம், ஹெம்லாக் போன்ற மரங்களின் இலைகளையும் பட்டைகளையும் கடித்து உண்ணுவது சகஜம். மூலிகை, குத்துச் செடி முதலியவைகளையும் உட்கொள்ளும்.

வந்தது : அமிர்தபஜார் பத்திரிகை கல்கத்தா.

கேட்டீர்கள்! வந்துவிட்டது!
புத்தக வடிவில்! அழகிய முகப்புடன்!
இலக்கியக் களஞ்சியம்!
நூற்றுக்கணக்கான கவிஞர்களின்
மணிமாலை!
—இந்த நூல் எங்கே இருக்கிறதோ
அங்குதான் தமிழ் வாழ்கிறது!
தென்றல்
வெண்பா
1000 வெண்பாக்கள்!
புலவர்கள் பலரது முன்னுரை!
கண்ணதாசன் எழுதிய "இன்ப வெள்ள"த்தோடு!
கவிஞர்களின் பெயர்கள், அகரவரிசையில்!
தென்றலில் சுவைத்தீர்கள்!
திரட்டித் தந்துள்ளோம், புத்தக வடிவில்!
அரிய முயற்சி! நூலுக்கு முந்துக!
காலிகோ பைண்ட்: விலை ரூ. 2. – சாதா பதிப்பு: விலை ரூ. 1-8-0
★ தென்றல் ஏஜண்டுகளுக்கு, முப்பது சதவிகிதம் கழிவு உண்டு. தபால் செலவு தனி.
★ தனி நூலுக்கு இரண்டு ரூபாய்கள் அனுப்ப வேண்டும். தபால் செலவு பதிப்பகத்தைச் சார்ந்தது.
எழுதுக
கண்ணதாசன் பதிப்பகம்
2-127, மவுண்ட் ரோடு : : சென்னை-6.

தேர்தல் வருகிறது; தெரிந்துகொள்ளுங்கள்!



6. மாணிக்கவேலர்

பல்லவி

என்னை அறியாயோ ?-தமிழா
என்னை அறியாயோ ?

அனுபல்லவி

முன்னம் காங்கிரசை முழு மூச்சாய் எதித்து
பின்னர் அதனடியில் பிணந்து சரணடைந்த (என்னை)

சரணம்

அடிக்கடி நிறம்மாற்றும் பச்சோந்தி-தன்
அரும்பெரும் கொள்கையினைக் கரத்தேந்தி
நடிப்பதும், இடம்பார்த்து நடப்பதும் குறியாக
நானிலத் துலவும் மானமற்ற தொரு
ஈன ஜென்மமென நாடுரைத்துவரும் (என்னை)

மாணிக்க வேலரெனில் இந்நாடு-தன்
வாய்விட்டு நகையாடும் அன்போடு!
ஏணிக்கு மக்களேயும், ஏறித் துயில்போக
எவரெவர் வரினும் அவரவர் மனது
கோணுமல் சரணுகி வாணுளைச் சுகமாக்கும் (என்னை)

பச்சோந்திக்கு! ஜே!
பச்சோந்திக்கே ஓட் செய்யுங்கள்!

—கதா

தூணைத்தழுவிய தோகை!

சித்திர மார்பும் சீர்பெறு முகமும்
கைத்திறங் கொண்டு சிற்பி கடைந்த
சிலேநிகர் தோளும் சிந்தையில் தளிரும்
கொண்ட காளை அக் கோமகன்! அவனே
நளனெனும் பெயரினன்! நனிபுகழ் வீரன்!
அன்னவன் பெருமை அனைத்தையும் ஓர்நாள்
அன்னம் என்னும் அழகிய நங்கை
தமயந் திஎனும் தையல்பாற் சொல்ல,
தாளாக் காதலில் மூழ்கினள் தையல்!
பின்னர் ஓர்நாள் பேரழ குருவைக்
கண்ணுற் கண்டு களித்தனள் காரிகை!
நாழிகை ஓட நாட்கள் நடக்க
காதல் கனலாய்க் கன்னியை வாட்ட
முத்து மாலே, மூண்ட தீயினில்
வெந்து விழ, மேனி துடிக்க,
கள்வர் மனம்போல் காரிருள் சூழும்
வேளேயில் மார்பகம் விம்மித் தாழ,
தென்றல் சீற, தேன்மதி கொதிக்க
இலக்கியக் காதல் வழக்கம் போல
எல்லாம் நடக்க, எழில்மிகு கோதை
தனிமைத் துயரில் தவித்தனள்! ஓர்நாள்
இரவுநேரம்; ஏந்திழை அணையில்
திரும்பித் திரும்பி தேம்பிக் கிடந்தனள்!
அப்பொழு தேஅவள் அழகிய விழிமுன்
நளனுரு வந்து "நங்காய்!" என்றது!
எழுந்தாள் கோதை! இருகை நீட்டி
அணைக்கத் தாவினள்! ஐயோ! கனவே!
நளன்வர வில்லே; நங்கை தரையில்
தனியாய்க் கிடந்து தவியாய்த் தவித்து
மீண்டும் எழுந்தாள்; வீர மார்பின்
தோற்றம் மீண்டும் தூணிடைத் தோன்ற,
தூணைக் கட்டித் தோள்களைச் சேர்த்து
மார்புறத் தழுவி, மாறி மாறி
முத்தம் பொழிந்தனள்; மூன்று நாழிகை
சென்றது; கோதையின் சிந்தை தெளிந்தது!
"தூணு? நளனு?"-தோகை, தூணைப்
பார்த்து வாடினள்; பழக்கப் படியே
நாணம் மோத, நைந்தனள் நின்று!

இப்படி,

தூணைத் தழுவிய தோகையின் காமச்
சுவையை வழங்கும் தொல்புகழ்க் காவியம்
புலரிடையில் வெண்பாப் புலியெனப்
புலவர் போற்றும் புகழேந் தியரின்
'நளவெண்பா' எனும் நன்மலர்ச் சோலே!

இது வெண்பா:

எழுந்திருக்கும் ஏமாந்து பூமாந் தவிசின்
விழுந்திருக்கும் தன்னுடம்பை மீளச்-செழுந்தரளத்
தூணுேடு சேர்க்கும் துணையேதும் இல்லாதே
நாணுேடு நின்றழியும் நைந்து!

--நள. 127

10

“இதுதான் சீதாவா?”-தேசானந்தர் குழப்பத்தோடு கேட்டார்.

“ஏன்? அதிலென்ன சந்தேகம்?”-சூடாமணி தெளிவோடு பதில் சொன்னான்.

அவன் முகத்திலே விகாரமான மாற்றத்தை எதிர்பார்த்த தேசானந்தர், சலனமற்ற அவனது நிலையைக் கண்டதும் குழம்பினார். “ஒருவேளை நாடகக் கம்பெனி மானேஜர் சொன்னதுதான் பொய்யாயிருக்குமோ?” என்று எண்ணமிடத் துவங்கினார்.

ஆனாலும், “இந்தப் பெண்ணை, இரண்டு தினங்களுக்குமுன் நாடகத்தில் பார்த்தேனே!” என்று இழுத்தார்.

அப்போதுதான் அந்தப் பெண்ணும் அவரை சரியாக அடையாளம் கண்டுகொண்டாள்! ஆகா! நாடகத்துக்கு நடுவிலே மேடையேறி முழக்கிய வரல்லவா இவர்!

“பார்த்திருக்கலாம். இவள் தன் கதையையே நாடகமாக்கி. தானே நடித்துக்கொண்டிருந்தாள். உங்களுக்குத்தான் பூரா விபரமும் தெரியுமே?” என்றான் சூடாமணி.

அந்தப் பெண், பேசாமலே நின்றிருந்தாள்.

தேசானந்தர், சூடாமணி சொன்னதை அப்படியே நம்பி விடத் தயாராயில்லை.

“இவள் அந்த சீதா அல்ல் என்று நாடகக் கம்பெனி மானேஜர் சொன்னார்”—என்றார்.

“யார் சொன்னது அப்படி! இந்தப் பெண்ணைப் பற்றி நீங்கள் அவரிடம் கேட்டீர்களா?”-இது சூடாமணி.

“கேட்டேன்”.

“ஒருவேளை, இந்தப்பெண்ணை நீங்கள் அழைத்துச் சென்றுவிடலாம் என்று பயந்து அவர்பொய் சொல்லியிருக்கக்கூடும். இதோ எதிரேதானே நிற்கிறாள். கேட்டுப் பாருங்களேன்!’ என்றான் சூடாமணி.

தேசானந்தரின் மூளை குறுக்கு வழியில் வேலை செய்தது.

“ஆமா...ஏம்மா...என்னதான் இருந்தாலும் குழந்தையைக் கொன்று பெட்டிக்குள் வைக்கலாமா?’ என்றார்.

“வேறென்ன செய்வது! அதுதானே எனக்கிருந்த ஒரே வழி!” என்று அமைதியாகப் பதில் சொன்னாள், அவள்.

“முன்பு நீங்கள் சென்னையில் குடியிருந்தீர்களே, ஞாபகமிருக்கிறதா?”

“ஐ! ஞாபகம் இல்லாமலா போகும்!”

“அப்பொழுது உங்களுக்குள் சண்டை வருவதுண்டா?”

“எப்போதாவது வரும்! இது குடும்பங்களில் வழக்கம்தானே!

“உங்கள் சொந்த ஊர் எது?”

“தஞ்சாவூர்”.

“முதன் முதலில் உன்னை, நாடகக் கம்பெனியில் சேர்ப்பதாக அழைத்துவந்து இவரிடம் விட்டவர் பேரென்ன?”

“வேலையா!”

—அந்தப் பெண், தேசானந்தரின் கேள்விகளுக்கு “டக்டக்” கென்று பதில் சொன்னாள். அவ்வளவு சுலபத்தில் பதில் வந்ததைக் கவனித்து தேசானந்தர், அவளை ஓரளவு நம்பினார் என்றாலும், இதெல்லாம் பாடமாக இருக்குமோ, சூடாமணி சொல்லிக் கொடுத்திருப்பானோ என்ற சந்தேகமும் அவருக்கு எழுந்தது.

“மறுபடியும் இவரோடு வாழ்வு துவங்குவதில் விருப்பந்தானே?” என்று கேட்டார்.

“விருப்பமில்லாமலா நாடகக் கம்பெனியை விட்டு வெளியேறினேன்” என்றாள் அந்தப்பெண்.

—தேசானந்தர் அதற்குமேல் பேசி அவமானப்படத் தயாராயில்லை.

“சரி! போகலாம்!” என்று எழுந்தார்.

—விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டார்கள்.

‘இரண்டுங் கெட்டான், மனதோடு ஊர் திரும்பினார் தேசானந்தர். புறப்படும்போது, திருமணத்தன்று காலையில் வந்துவிடுவதாக உறுதியளித்தார், சூடாமணியிடம்.

வீடு திரும்பிய அவரை, வேதனை வாசலிலேயே வரவேற்றது. கண்களில் நீர் மல்க, வாசலில் நின்ற கோமளம், அந்த வேதனையை அவரது இதயத்திற்குச் சமர்ப்பித்தாள். தேசானந்தரின் தலையில் இடி வீழ்ந்தது போலாயிற்று!

சரசுவைக் காணவில்லையாம்; அதே நேரத்திலிருந்து மாசிலாமணி செட்டியாரின் மகன் மாணிக்கத்தையும் காணவில்லையாம்!

“இரண்டும் இரண்டும் நாலு” என்று கணக்குப் போட வெகு நேரமாகவில்லை அவருக்கு!

“என்ன மோசமான பிறவிகள்! எல்லாம் சேர்ந்து என் உயிரை வாங்குகின்றனவே!” என்று தலையில் அடித்துக் கொண்டார் தேசானந்தர். குட்டி போட்ட பூனை மாதிரி முன்னும் பின்னுமாக வீட்டுக்குள்ளேயே உலாவினார். “எனக்கு அப்பொழுதே தெரியும்!” என்று முணுமுணுத்தார். “படாத பாடு பட்டு, பையனை ஜாமீனில் எடுத்து வந்தால், அவன் தன் தங்கையையே இழுத்துக் கொண்டு போய்விட்டான்” என்பதை எண்ணும்போது அவர் நெஞ்சு வெடித்துவிடும் போல் இருந்தது.

“நன்றி கெட்ட உலகம். இந்த உலகத்தில் எவனுக்குமே நன்மை செய்யக்கூடாது. எல்லாம் அந்தந்த நேரத்தோடு சரி. திருட்டுப் பயல்கள்! இவன்களையெல்லாம் சிறையிலேயே போட்டு வாட்டவேண்டும்!” என்று தனக்குத்தானே பேசிக் கொண்டார்.

கோமளம், என்ன பதில் சொல்வது என்று புரியாமல் நின்றுகொண்டிருந்தாள்.

“உலகத்திற்கு நன்மை செய்யப் புறப்பட்டு, எல்லோரையும் வாழ வைக்க முயற்சிக்கும் மனிதன், தான் எவ்வளவு பெரிய தவறு செய்கிறோம் என்பதை உணருவதில்லை. மனித சுபாவத்தைப் போல், நன்றிகெட்டது உலகில் எதுவுமே இல்லை. கண்ணீர் வடிப்பவனையும் கவலைப் படுபவனையும் பார்த்து இரக்கப் படுபவன், பிறகு தானே கண்ணீர் வடிக்கும்படி ஆகிவிடுகிறது! சோற்றுக்கு அலையும் வரைதான் மனிதன் புத்தி தெளிவாக இருக்கிறது. அந்தப் பிரச்சினை தீரும்போது, அதைத் தீர்த்தவனிடமே தன் கைவரிசையைக் காட்டுவதுதான், அயோக்கியர்கள் நிறைந்த இந்த உலகத்தின் நடைமுறை. சாகிறவனைச் சாக விட்டு, தன்னை எச்சரிக்கையாகக் கவனித்துக் கொள்வதுதான் வாழத் தெரிந்தவன் செய்யக்கூடிய செயலாகும்.”-தேசானந்தர் இப்படிச் சிந்தித்தார். தேசப் பணியில்கூட அவருக்கு நம்பிக்கை குறைய ஆரம்பித்தது. “நல்ல இதயத்தையெல்லாம் யார் மதிக்கிறார்கள்? பணம் வேண்டும்! பணம்! ஆம் அது மட்டும் இருந்துவிட்டால் போதும்! இந்த உலகத்தில் அதுதான் வாழ்வைப் படைக்கிறது! சும்மா, நாட்டு மக்களைத் திருத்த முயன்றால், வீட்டுமக்கள் அவதிப்படத்தான் நேருகிறது! பெரும்பகுதி சமுதாயத்துக்கு இல்லாத இரக்க சுபாவத்தை சிறு புகுதியினர் கைக்கொண்டால் எப்படி வாழமுடியும்! அயோக்கியர்களின் உலகில் அயோக்கியனாகவே வாழப் பழக வேண்டும். இல்லையென்றால், யோக்கியமான இதயமே நம்மைக் கொன்றுவிடும்!”—அவர் முடிவின்றி யோசித்தார்.

முகவாய்க்கட்டையில் கையை வைத்தபடி ‘பட்டாலை’யில் உட்கார்ந்திருந்தாள் கோமளம். அவர்கள் வீடு, களை கெட்டு போய் இருந்தது.

“சரி சரி! சனியன் தொலைகிறது. போய்க் காப்பி கொண்டு வா!” என்று உத்தரவிட்டார், தேசானந்தர். கோமளம் உள்ளே சென்றாள். தேசானந்தர் அலமாரியைத் திறந்து, கைக்குக் கிடைத்த ஒரு புத்தகத்தை எடுத்து படிக்க ஆரம்பித்தார். அது பிருதிவிராஜனைப் பற்றிய கதை. தேசானந்தர் படித்தார்.

பிருதிவி, ராணி சம்யுக்தையைத் தூக்கிச் சென்ற கட்டத்தைப் படித்தார். தேசானந்தரின் கண்களுக்கு, சரசு, சம்யுக்தையாகக் காட்சியளித்தாள். மாணிக்கம்தான் பிருதிவிராஜனா? அவர் ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை! புத்தகத்தை மூடினார். காபி கொண்டு

— 10-ம் பக்கம் —

★ கரிந்தலச்சிக் காளி ★

கரிந்தலச்சிக் காளி (கருந்தலை ஊமனா) என்பது ஒரு நாட்டுப் பறவை. செம்மண்ணின் வர்ணம்; கறுப்புக் குல்லாய் வைத்ததுபோல் தலை; சற்று நீண்டு மெலிந்த உடல் - இந்த லட்சணங்களைக் கொண்டது.

கரிந்தலச்சியின் உருவத்துக்கு ஓர் அழகு உண்டு. வாரி நறுக்கி விட்டதுபோல் தோன்றும் இதன் இறகுகள். தலை அலகுமுதல் பின் கழுத்துவரையில் கறுப்பாக இருக்கும். நீண்டு ஒதுங்கிக் கிடக்கும் கறுப்பான சிறு இறகுகள், பின்பக்கம் படிந்த தலைமயிர்போல் பின் கழுத்துவரையில் நீண்டிருக்கும். எதையாவது இந்தப் பறவை கொத்தும் சமயத்திலும், நல்ல காற்று வீசும் போதும், இதற்கு உற்சாகம் மேலிடும்போதும் இந்தத் தலைமயிர் குத்திட்டு நிற்பதை அல்லது சிதறிக் கலைந்திருப்பதைக் காணலாம். இவ்விதம் பிடரி மயிர் தனிப்பட்டு நிற்கும்போதுதான் இதற்கு இத்தகைய மயிர் இருப்பதைக் காண முடியும். இதன் கழுத்தும் மார்பும் அடிப்பக்கமும் சிறிது காவி பூசியதுபோல் செம்மை கலந்து வெளிறிய தவிட்டு நிறம் உடையவை. முதுகும் இறக்கைகளும் சாம்பல் வர்ணம். இறக்கையில் இருக்கும் பெரிய இறகுகள் ஏறக்குறையக் கறுப்பு என்றுதான் கூறவேண்டும். மைனா இனத்தைச் சார்ந்த மற்ற பறவைகள் பறக்கும்போது அவற்றின் இறக்கைகளில் தென்படும் வெண்பொட்டுகள் கரிந்தலச்சி மைனாவுக்கு இல்லை. ஆனால் வாலின் இரு புறமும் மற்றவற்றுக்கு இருப்பதுபோல் இறகுகளின் நுனியில் இதற்கும் வெண்மை நிறம் உண்டு. இதன் வால் நீளம் குறைந்து விசிறிபோல் வட்ட வடிவமாயிருக்கும். வாலின் நடுவே இருக்கும் இறகுகள் கறுப்புக் கலந்த கருந் தவிட்டு நிறம். கொஞ்சம் கவனித்துப் பார்த்தால் இதன் கால்கள் நல்ல மஞ்சளாயிருப்பது தெரியும். அலகின் நுனி மஞ்சள்; நடுப்பாகம் பச்சை; தலையோடு சேர்ந்த பாகம் நீலம். சிறிது பச்சை கலந்த வெண்மை நிறமுடைய கண்கள்.

தரையில் நடந்து இது இரை தேடும். இதை இந்தியாவில் எங்கும் பார்க்கலாம். கொஞ்சம் வறண்ட சமதரைப் பிரதேசங்களில் இதற்குப் பற்று அதிகம். மலைகளிலும் பெருங்காடுகளிலும் இதைக் காண்பது அரிது. நன்செய் வயல்களிலும், புன்செய்க் காடுகளிலும், மரங்கள் அடர்ந்து நிற்காத சிறு காடுகளிலும் நாம் இந்தப் பறவையைக் காணலாம். இந்த மைனாவுக்குப் பெரிய மரங்களில் அலாதியான பிரியம். முக்கியமாகச் சாலை ஓரங்களில் இருக்கும் வயது முதிர்ந்த மரங்கள்தான் இதற்கு ஸ்திரமான வாசஸ்தலம்.

பெரிய பட்டணவாசத்தில் இதற்கு விருப்பமில்லை. மனிதரிடம் பயமோ வெறுப்போ நட்போ ஒன்றும் இதற்குக் கிடையாது. ஆனால், 'தான் விரும்பிய இடத்தில் இருப்பதற்குத் தனக்கே உரிமை உண்டு. தனக்கு இடையூறாக மற்ற எதுவும் வர அநுமதிக்கக்கூடாது.' என்ற உணர்ச்சி மற்ற மைனாக்களைப்போல் இதன் மனத்திலும் வேரூன்றி இருக்கிறது. எப்போதும் மனிதர் நடமாடும் பாதை ஓரங்களிலிருக்கும் மரங்களிலும், வீட்டு மாடங்களிலும் மனிதனின் கைக்கு எட்டாத உயரங்களில் தைரியமாக இது கூடு கட்டும். அனைவரும் பார்க்கக் கூடியபடி கூட்டுக்கு வெளியே வந்து விளையாடுவதும் குஞ்சுகளுக்கு உணவு கொடுப்பதும் இதன் வழக்கம். ஒரே மரக்கிளையில் ஆண்டுதோறும் இது கூடு கட்டுவதுண்டு.

எங்கள் ஊரில் இரண்டு மூன்று டீக் கடைகளுக்கும் சில குடிசைகளுக்கும் இடையே பாதையின் ஓரத்தில் ஒரு பெரிய மாமரம் இருந்தது. தரையிலிருந்து சுமார் பத்தடி உயரத்தில், உளுத்துப்போன ஒரு கிளையில் ஒரு பொந்து இருந்தது. அது சில கரிந்தலச்சிகளுக்கு இருப்பிடமாக இருந்தது. வெயில் காலத்தில் இந்த மரத்தடியில் கடலை விற்பவரும், வேக வைத்த கிழங்கு விற்பவரும், பகல் முழுவதும் இருப்பார்கள். ஆயினும், ஒவ்வொரு வருஷமும் ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் அங்கே கரிந்தலச்சி கூடு கட்டாமல் இருப்பதில்லை. எனக்குத் தெரிந்தவரையில் எவரும் இந்தப் பறவையை அங்கே துன்புறுத்தியதில்லை. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன் அந்த மரம் விழுந்துவிட்டது. அதற்குப் பின் இந்தப் பறவை அங்கே தென்படவில்லை.

இதே போல் ஆண்டுதோறும் இந்தப் பறவைகள் கூடு கட்டி வரும் ஒரு புளிய மரம் இருந்தது. இந்த மரம் மலைச்சாரலில் உள்ள செயற்கைத் தோட்டம் ஒன்றில் இருந்தது. அங்கே ஒரு சமயம் பெரிய சாரைப்பாம்பு ஒன்று இந்தப் பறவைகளின் குஞ்சுகளைத் தேடிக்கொண்டு வந்துவிட்டது, ஆனால் கூட்டின் சொந்தக்காரர்களான இரு கரிந்தலச்சிகள் வேறு பல பறவைகளின் உதவியோடு அந்தப் பாம்பைக் கொத்திக் கொத்தி, அந்த இடத்திலிருந்து ஓட்டிவிட்டன.

மலையாளத்தில் இந்தப் பறவையைப் பார்ப்பது எளிதல்ல. ஒன்று அல்லது இரண்டு மைல் தூரம் நடந்து சென்றால் எங்கேயாவது ஆணும் பெண்ணும் சேர்ந்த ஒரு ஜோடியைப் பார்க்கலாம். ஆனால் சிறு காடுகளிலும் பெரிய மரங்கள் இருக்கும் இடத்திலும் நாலைந்து ஜோடிகளைப் பார்க்க முடியும். சில இடங்களில் ஸ்திரமாகவும் சில இடங்களில் தாற்காலிகமாகவும் இந்தப் பறவைகள் தென்படும்.

சென்னைக்கு அருகில் இருக்கும் சில விசாலமான சிறு காடுகளில் கோடைக்காலத்தில் காலையிலும் மாலையிலும் ஐந்நூறு அல்லது அறுநூறு கரிந்தலச்சிகளைக் கூட்டங்கூட்டமாக நான் பார்த்ததுண்டு. ஆனால் வேறு சமயங்களில் ஒரு பறவையைக்கூட நான் பார்த்ததில்லை.

கரிந்தலச்சி, மற்ற மைனாக்களை விடச் சிறந்த ரசிகன் என்றே கூறவேண்டும். இதற்கு அழகும் அதிகந்தான். சில சமயம் முக்கியமாகக், கோடையில் மரக்கிளையில் உட்கார்ந்துகொண்டு இந்த மைனா தன்னந்தனியே தாழ்ந்த குரலில் வெகுநேரம் பாடிக்கொண்டிருக்கும். மற்ற மைனா வகைகள் இவ்விதம் பாடினாலும் இடையிடையே கொடூரமான சத்தம் உண்டாக்கிப் பாட்டைக் கெடுத்துவிடும்.

எனக்கு மைனாக்களில் கரிந்தலச்சியிடந்தான் அதிகமான பற்றுதல். காட்டு மைனாவைப் போல் பாட்டுப் பாடவும் மனிதரைப் போல் பேச்சுப் பேசவும் இதற்குத் திறமையில்லை. ஆயினும் இந்த மைனாவைப் போல் சுறுசுறுப்பும், நற்குணமும், தான் என்ற எண்ணமும் மற்ற மைனாக்களுக்கு இல்லை என்று நான் உணர்ந்திருக்கிறேன். இது மற்ற மைனாக்களைப் போல் சகஜமாகத் தென்படாமல் இருப்பதும் இதன் உயர்வை நமக்கு உணர்த்துகிறது.

வந்தது : மாத்ருபூமி (மலையாளம்; 23 10-'55), கோழிக்கோடு.

நித்திக்கும் செந்தமிழ் !

கவிஞர் கண்ணதாசன்
அவர்களின்
கன்னித் தமிழ்க் காப்பியம்

★ மாங்கனி ★

விலை ரூபாய் இரண்டு.

கவிஞர் துரைமாணிக்கம்
அவர்களின்
இனிக்கும் செந்தமிழ்க் காப்பியம்

-: கொய்யாக்கனி :-

விலை ரூபாய் 2-4-0.

அருணா பப்ளிகேஷன்ஸ்
தியாகராய நகரம், சென்னை-17

குறிப்பு:—'தென்றல்' வாசகர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் தனிச் சலுகைகள் உண்டு.

பழநி, ஆர். எம். கே. வேலுசுவாமி
சித்த வைத்தியசாலை.

56 வருட அனுபவம் பெற்றது.

தீராத கொடிய வியாதிகளையெல்லாம் தீர்த்து பல்லாயிரக்கணக்கான நற்சாட்சிகள் பெற்று இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நிகரில்லாப் புகழ் பெற்றது.

பெண்களுக்கு ஓர் வரப்பிரசாதம்.

சூதக சம்பந்தமான சகல குற்றங்களும் நீங்கி புத்திர சந்தானம் உண்டாக
பழநி ஆர். எம். கே. கெற்ப சஞ்சீவி எண்ணெய் சாப்பிடுங்கள்.

பெண்களுக்கு மாதாந்திரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்றுவலியை அந்த க்ஷணமே நிறுத்தும். எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாட்பட்ட சூதக வயிற்றுவலியும், சூதக சிக்கலும் இதில் அவசியம் தீரும். காலாகாலத்தில கிரமப்படி பஹிஷ்டையாகும். கெற்பப் பையிலுள்ள 6-வித குற்றமும் தீர்ந்து கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். அனுபவத்தில் கைகண்டது. சூதகவயிற்றுவலி இருக்கும் வரை கெற்பம் தரிக்காது. மேற்படி வலி தீர்ந்து கெற்பம் தரிக்க வேண்டுமானால் பழநி, ஆர். எம். கே. வேலுசுவாமி கெற்ப சஞ்சீவி எண்ணெய் சாப்பிடுங்கள்.

தபால் செலவு உள்பட ரூ. 7-10-0

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி! விபரமாய் எழுதுங்கள். கேட்டலாக் இனாம்.

பிரதம வைத்தியர் & மானேஜர் :—சித்த வைத்தியக் களஞ்சியம் ஆர். எம். கே. சிவசுப்ரமண்யஓம்.

ஆர். எம். கே. வேலுசுவாமி, சித்த வைத்தியசாலை,
தபால் பெட்டி நெ. 16, (டெலிபோன் நெ, 219) பழநி. (S.I.)

உம்மதுல், அவள் ஆண் வேடம் தரித்திருப்பதற்கான ரகசியத்தை உடைத்தாள்:

"குளுமையான இரவு நேரம். வெள்ளித் தட்டைப் போன்ற முழுமதி மேகமண்டலத்திற்குள் மறைவதும், முகத்தைக் காட்டுவதுமாக இருந்தது. கான்ஸ்டாண்டிநோபிள் நகர மாடமாளிகைகளிலெல்லாம் பனித்தூள் படிந்திருந்தது. பிரபுக்கள் வீட்டில் பதிகம் போட்டு வளர்க்கப்பட்ட அரேபிய ரோஜாவின் நறுமணம் துருக்கியத் தலைநகரத்தையே மணவறை யாக்கிக் கொண்டிருந்தது. ஜரிகைப் பூக்கள் ஒட்டிய மெல்லிய பட்டுத் துணி யுடுத்திய ஒரு பெண்ணும், அவளது இடதுகையை இறுகப் பிடித்தபடி இன்னொரு வாலிபனும் நிலை மறந்து நதிக்கரைப் பக்கமாக ஓடினார்கள். ஆற்று நீரை எதிர்த்து நீந்துவது போலிருந்தது அவர்களின் ஓட்டம். ஒருவேளை, காற்றின் வேகம் காட்டாற்று வெள்ளம் போல் இருந்திருக்கலாம்.

அவர்கள் இருவரும் ஆற்று மணலில் கட்டிப் புரண்டார்கள். களைப்பு ஏற்படுகிற வரையில் அங்கே வாலிபக் கூத்து நடைபெற்றது. மிதமிஞ்சிய செல்வமும், நாட்டை அதம் செய்யக் கூடிய அதிகாரமும் பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர்களைப் போல் அவர்கள் காணப்பட்டார்கள். தென்றல் காற்றில் அசையும் செடிகொடிகளின் ஓசைக்குக் கூட அந்த இளநெஞ்சுகள் நடுங்கின. கள்ளக் காதலர்களாயிற்றே! துணிவு எங்கே இருக்கப் போகிறது!

"கண்ணே!"

"ராஜா!"

"இன்று நாம் அளவுக்கு மீறி நடந்துகொண்டு விட்டோமல்லவா!"

"கிழடு தட்டி கோலூன்றி நடக்கும் காலம் வரை சேமித்து வைக்கச் சொல்கிறீர்களா?"

"இல்லை அன்பே, நேற்றையக் காட்டிலும் இன்று......"

"......இன்று குறைவுதான். ஏனென்றால் நாளைக்கு இருக்காது அல்லவா! கூட்டிப் பார்த்தால் குறைவுதானே!"

"குறும்புக்காரி! உனக்கு எப்படித் தெரியும், நாளை நாம் சந்திக்கமாட்டோம் என்று".

"அப்பா சொன்னார். நாளை நீங்கள் உளவறியப் போகிறீர்களாம்! அரித்துவாரத்தில் முகாமடித்திருக்கும் எதிரிகளின் கூட்டத்துள் நுழைந்து செய்தியறிந்து வரப் போகிறீர்களாம்!"

"உனக்கு பயமாக இல்லையா? எதிரிகள் என்னைக் கொன்று விட்டால்...!"

"ஏன் போகும்போதே விடுகதை போடவேண்டும்? சாகும் வரை நல்லதையே பேசித் தீர்க்க வேண்டியகாலத்தை நான் சோதனைக்குள்ளாக்க விரும்பவில்லை. அதற்காக, திமை மனித வாழ்வில் புகக்கூடாதது என்றும் நான் சொல்லவில்லை. இந்தப் பருவத்தில் திமைகளையும் துன்பங்களையும் எண்ணிக் கூடப் பார்க்கக் கூடாதென்கிறேன். தயவு செய்து நல்லதையே பேசுங்கள். இளமையில் கிடைக்கும் இன்பம் வேறு, முதுமையில் கிடைக்கும் இன்பம் வேறு".

"பதினெட்டு வயதுகூட நிரம்பப் பெருத நீ, இந்த உலகத்தில் பல பிறவிகள் எடுத்தவளைப் போலப் பேசுகிருயே! உன்னிடம் நான் கற்றுக்கொள்ள வேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன சித்திரக் கிளியே!"

"எண்ணங்களை வெளிப்படையாகச் சொல்லும்போது அவைகளில் ஒரு சில, உண்மையான தத்துவங்களாகி விடுகின்றன. வாலிபத்தில் பேசும் பேச்சைப் பருவக் கிறுக்கு என்பர், ஞானிகள். பேசுவோரின் வயதா முக்கியம்! அல்லவே!"

"கண்ணே, வேளை நெருங்கி விட்டது. இன்னும் சிறிது நாழிகையில் தளபதியை சந்திப்பதாகச் சொல்லியிருக்கிறேன். போவோமா?"

"யாரை? அப்பாவையா?"

"ஆம், என் மாமனாரை!"

"போங்கள்! அப்பா அவ்வளவு விரைவில் ஏற்றுக்கொண்டு விடுவாரென்று நான் நம்பவில்லை":

"சைன்யத்தை நம்பியிருக்கும் தேசத்தின் தலைவிதியை மாற்ற முடியும் உன் தந்தையால்! மதச் சேற்றில் ஊறிப் போயிருப்போரின் தலைவிதியை மாற்ற உன் தந்தையால் முடியுமா? சாதாரணத் தளபதிதானே அவர்!"

—உம்மதுல் கதையை இந்த இடத்தில் மிகவும் சுவைபடச் சொன்னாள். அனுபவித்தவளைப் போலச் சொன்னாள். அவளுடைய உதடுகளில் ஈரம் படிந்திருந்தது. கண்களிலே தாகமும் சோகமும் பின்னிக் கிடந்தன. எதிரே இருந்த யஜ்தானியின் உள்ளம் குழம்பிக் கொண்டிருந்தது. கதையின் முடிவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

"அந்தப்பெண் சேனாதிபதியின் மகள்! இல்லையா?" தாயார் சேமியா ஒரு குறுக்குக் கேள்வியைப் போட்டாள்.

"ஆமாம்! பிரசித்தி பெற்ற சேனாதிபதியின் ஏகப் புதல்வி! துருக்கி நாட்டுக்குப் பல வெற்றிகளைத் தேடித் தந்திருக்கிறார் அந்தச் சேனாதிபதி. கலிபாவின் பேரன்புக்குப் பாத்திரமானவர்—இந்த உண்மைகளெல்லாம் அவர்களின் பேச்சிலிருந்து தெரிய வந்தன"—என்று உம்மதுல் சேமியாவின் கேள்விக்குப் பதில் சொன்னாள்.

யஜ்தானிக்கு, மனைவி சேமியாவின் குறுக்குக் கேள்விகள் பிடிக்கவில்லை. "சேமியா, சந்தேக நிவர்த்திகளைக் கடைசியாக வைத்துக் கொள்ளலாம். நாமென்ன இப்போது கதையா கேட்கிறோம்.........உம்மதுல் நீ தொடரலாம்!" என்றார் யஜ்தானி.

உம்மதுல் மீண்டும் தொடர்ந்தாள்:

"வாடைக் காற்று கொஞ்சம் அதிகமாக வீசியது. மயிலைப் போல் அவள் தடுமாறினாள். தோகைக்கு அணைவாக அந்தப் படை வீரன் வந்தான். இருவரும் பேசிக்கொண்டே போனார்கள். கொஞ்சதூரம் சென்றதும் ஒரு மாதுளைத்தோட்டம் வந்தது. படைவீரன் அந்தத் தோட்டத்திற்குள் கூர்ந்து பார்த்தான். ஐந்தாறு மாதுளைமரங்கள் திடீரென்று சலசலவென்று ஆடத் தொடங்கின.

"என்ன அது? உங்கள் பார்வையில் மந்திரமிருக்கிறதா? நீங்கள் குறிவைத்த இடத்தில் சலசலப்பு ஏற்படுகிறதே!"—அந்த யுவதி கேட்டாள்.

"மந்திரமாவது மாயமாவது! தளபதியின் ஏற்பாட்டின்படி கருங்குதிரை வந்திருக்கிறதா என்று பார்த்தேன். அதோ!" என்று அவன் சொல்லி முடிப்பதற்குள் தோட்டத்திற்குள்ளிருந்து ஒரு குதிரை கனைத்தது.

"எனக்குப் பயமாக இருக்கிறது ராஜா! இவ்வளவு அமைதியில் நீங்கள் எப்படிப் போகப்போகிறீர்கள்?" - யுவதி நடுங்கிக்கொண்டே கேட்டாள்.

"விசித்திரமான உலகம்! கண்ணே, மனித மனம் கலவரத்தையும் கண்டு பயப்படுகிறது, அமைதியைக் கண்டும் பயப்படுகிறது." - தத்துவ ஆராய்ச்சியிலிறங்கினான் வாலிபன்.

"கலவரத்தின்போது ஏற்படுகிற அச்சத்தில், இதயத்தில் எங்கோ ஒரு மூலையில் தைரியம் ஒளிந்து கிடப்பதை நம்மால் உணரமுடிகிறது. ஆனால் அமைதியான நேரத்தில் - தனியாகப் போகும்போது உண்டாகும் அச்சத்தில் தைரியமே தலை காட்டுவதில்லை" என்று உருக்கமாகச் சொன்னாள் அந்த யுவதி.

—எதிரே இருந்த யஜ்தானியின் முகம் கறுத்தது. சேமியா, தன் கணவனின் முகத்தைப் பார்த்துப் பயந்து, "மகளே உம்மதுல், அப்பாவைப் பார்!" என்று பரபரப்புடன் சொன்னாள். உம்மதுல் தந்தை யஜ்தானியின் முகத்தைப் பார்த்தாள். யஜ்தானியின் முகத்தில் செம்குறுத்துவிட்டு நின்றது.

"உம்மதுல்!" - என்று யஜ்தானி கர்ஜித்தார்.

(தொடரும்)

வெள்ளப்பகுதியில் கழகத்தோழர்கள் சுற்றுப்பயணம்

அண்மையில் பெய்த பெரு மழையால் பெரிதும் பாதிக்கப்பட்ட திருப்புத்தூர் (இராமனாதபுர மாவட்டம்) காளப்பூர், சதுர்வேதமங்கலம், சிங்கம்புணரி, தெக்கூர் முதலிய பகுதிகளில் தோழர்கள் எஸ். எஸ். தென்னரசு, திருப்புத்தூர் தொகுதிச் செயலாளர் பெரி. அழகு, தொகுதித் துணைச்செயலாளர் மரி. செபத்தி, தொகுதிப் பொருளாளர் மு. அ. ந. அழகு, திருப்புத்தூர் நகர தி. மு. க. செயலாளர் கா. காத்தமுத்து முதலியோர் சுற்றுப்பயணம் செய்தனர். 3-12-56 அன்று தோழர்கள் ஒவ்வொரு ஊரிலும் இறங்கி, வெள்ளப்பகுதிகளை நேரில் கண்டு பாதிக்கப்பட்ட பெருங்குடி மக்களையும் சந்தித்துப் பேசினார்கள். காளாப்பூரில், மாவட்டக் கழக உறுப்பினர் முத்துலிங்கம், சேவுகப்பெருமாள் ஆகியோருடன் வெள்ளச் சேதம் பற்றிக் கலந்து உரையாடி, நிலைமையைப் பொதுச் செயலாளருக்குத் தெரிவிப்பதாகக் கூறினார்கள்.

எழுத்து வந்த கதை

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

பட்டது. கைகளின் படம் கைகளைக் குறிக்காமல் நட்பினைக் குறிக்கின்றது என்பதைச் சந்தர்ப்பம் நோக்கி மக்கள் உணர வேண்டியவர் ஆயினர்.

அடுத்தபடியாக, ஒவ்வொரு படமும் ஒவ்வொரு கருத்தினைக் குறித்து நிற்காமல், அவ்வவ் வடிவத்திற்கு உரிய ஒலியைக் குறிப்பதாகக் கருதப்படலாயிற்று. இந்நிலையை ஒலியெழுத்து நிலை என்னலாம். உதாரணமாக, மா என்ற மரத்தின் படம், விலங்கு என்னும் பொருளுடைய மா என்னும் ஒலியையும் குறிப்பதாயிற்று. சித்திரக் குறுக்கெழுத்துப் போட்டியிற் படிப்பது போன்றே மக்கள்படிக்கலாயினர். அதனால், எந்நேரத்தில் மா என்ற மரம் கருதப்பட்டது, எந்நேரத்தில் மா என்ற விலங்கு கருதப்பட்டது, எந்நேரத்தில் பெரிய என்ற பொருளுடைய மா கருதப்பட்டது என்றுகாட்டவேண்டிய அவசியம் எழுந்தது. அக்காலத்தில், ஒவ்வொரு படத்தின் அருகே திறவுகோல் போன்றமைந்த சிறு வடிவங்களும் சேர்க்கப்பட்டன; அல்லது பட வடிவு கொண்டு ஒலிக்கும்பொழுதே உச்சரிப்பில் சிறிது சிறிது வேறுபாடு செய்யப்பட்டது. இவ்வாறு அஸ்ஸிரியா, சைன முதலிய தேசங்களில் ஒலி வகை வடிவங்கட்கு வேறுபாடுகள் வகுத்துக்கொண்டனர். நம் தேசத்திலும், மீன் ஒன்றின் வடிவம் மீன் என்ற பொருளைக் குறிப்பதோடல்லாமல், மின்னுதல் தொழிலையும், மின்னுகின்ற நட்சத்திரத்தையும் குறிப்பதற்கு ஒலிவகையாற் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது என்று அறிஞர் ஹெராஸ் அவர்கள் காட்டியுள்ளார். மொஹஞ்சோதாரோவிற் காணப்படும் பழங்கால எழுத்துக்கள் தமிழ் மக்களின் பண்டைய எழுத்துக்களே எனச் சான்றுகொண்டு அவர் நிறுவியுள்ளார்.

ஒவ்வொரு உருவங் காட்டும் முழு ஒலியையும் கொள்ளாமல், அவ்வவ்வொலியின் முதலசையை மாத்திரம் கருத்திற் கொள்ளத் தலைப்பட்ட மக்களும் உண்டு. அவ்வாறே செமிட்டிக், ஜப்பானிய, சிப்பிரியாட் மொழிகள் கொள்ளத் தலைப்பட்டன. உதாரணமாக, அகரத்தைக் குறிக்க எகிப்திய மொழியிற் கண்ட எருதுவின் தலை வடிவம் கிரேக்க மொழியில் ஆல்பா எனப்பட்டது. அதனையே முதலசையாகிய ஆல்ஃப் என்ற அளவில் செமிட்டிக் மொழி எடுத்துக் கொண்டது.

இதுவே "அ" என்ற அளவில் நிறுத்திக் கொள்ளப்படுகின்ற கடை நிலைதான் எழுத்து வரலாற்றின் முடிவு நிலை. ஓர் உருவம் குறிப்பிடும் ஒலியில் முதலசையைக் கூட முழுதும் எடுத்துக்கொள்ளாமல்,முதல் எழுத்து அளவே அமைதல் என்பதுதான் அக்கடைநிலை. ஒவ்வொருமொழியிலும், ஒவ்வோர் எழுத்தை முதல் எழுத்தாகக் கொண்ட எத்தனையோ பல சொற்கள் இருப்பவும், அவற்றுள் ஒன்றின் வடிவம் மாத்திரம் ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற வினா எழுதல் இயல்பே. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட சொல் அம்மொழியில் அதிகமாக வழக்காற்றில் இருந்த சொல் என்பது ஒரு காரணம். அன்றி, அதன் வடிவம் ஏனையவற்றின் வடிவங்களைவிட எளிதான வடிவம் என்பதும் காரணம் ஆகும். உதாரணமாக, அம்மை, அப்பன், அணில், அடவி, அருவி, அணி, அடகு ஆகியவற்றுள் ஏதாவதொன்றன் வடிவந்தான் பெரும்பான்மை வழக்குப்பற்றி அகரத்தின் வடிவமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலை எய்தியிருக்கும். சீன மொழியில் இவ்வாறுதான் செய்தனர்.

எனவே, ஆதிகாலத்தில் மக்கள் ஓவியத்தின் வழியாகக் கதை சொல்லக் கற்றுப் பிறகு ஒவ்வொரு வடிவத்தையும் ஒவ்வொரு தனித் தனிப் பொருளைக் குறிக்கப் பயன்படுத்தினர். நாளடைவில், அவ்வடிவு பொருளைக் குறிக்காமல் ஒலியைக் குறிக்கத் தலைப்பட்டது. பின்னர், அவ்வடிவு அல்லது அவ்வடிவின் திரிபு முழு ஒலியையும் குறிப்பிடாமல், முதலசையொலியை மாத்திரம் குறிப்பிடுவதாகி, நாளடைவில் முதலெழுத்தளவே நின்றுவிட்டது என்பது அறியப்படும். இக்காலத்தில் உள்ள எழுத்துக்கள் எல்லாம் இம்முறைப்படி ஒரு காலத்தே ஒவ்வொரு பொருளின் ஓவியமாக இருந்தவற்றின் திரிபுவேறுபாடுகள் எனக் கருதப்படுகின்றன. இவ்வெழுத்துக்களின் விந்தையால் காலத்துக்கும் தேசத்திற்கும் அப்பாற்பட்ட பற்பல செய்திகளை நாம் அறியும் பேறு பெற்றிருக்கின்றோம். ★

டிசம்பர் 9!

★

நாட்டுக்கு நலம் செய்யவரும்
தி. மு. கழகத்தின் தேர்தல் நிதிக்காக

அறிஞர் **அண்ணா** அவர்கள்
தலைமையில்

முப்பெரும் கலைஞர்கள் தரும்முக்கனிச்சாறு!

★ நடிப்பிசைப்புலவர் கே. ஆர். ராமசாமி,
★ புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன்,
★ புதுமைநடிகர் எஸ். எஸ். ராசேந்திரன்
ஆகியோர்
நடிக்கும் அற்புதக் காட்சிகள்.

டிசம்பர் 9! எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

கட்டணம் ரூ. 10, 5, 3, 1 பெண்கள் ரூ. 1

— 7-ம் பக்கத் தொடர்ச்சி —

வந்தாள், கோமளம். குடித்தார். குடித்துவிட்டு, "இதோ வந்து விடுகிறேன்!" என்று மட்டும் கூறிவிட்டு வெளியேறினார். போலீசிலேயே போய்க் கூறிவிட வேண்டும்போல் தோன்றியது அவருக்கு. சரசு போனது மட்டுமல்ல; மாணிக்கத்துக்கு ஜாமீனாகவும் அவரல்லவா நின்றிருக்கிறார்!

நேரே மாசிலாமணிச் செட்டியார் வீடு நோக்கி நடந்தார்.

"என்னங்க......ஒங்க பையன் யோக்கியதை நல்லாருக்குல்ல!"-போனதும் போகாததுமாக, மாசிலாமணிச் செட்டியாரின் முகத்திலடிப்பது போல் கேட்டார்.

"இந்தாங்க.......உக்காருங்க பேசுவோம்" என்றார் மாசிலாமணி.

"உக்காருவோமையா! இதுக்குத்தானா, ஒம்ம பையனை அலைஞ்சு தவிச்சு ஜாமீனிலே எடுத்து வந்தேன்? இது நல்லா இருக்கா!"

"என்னங்க பண்றது! எம் பையன் ஒங்க தங்கையை இழுத்துக்கிட்டுப் போனானா, இல்லெ ஒங்க தங்கை எம் பையனை இழுத்துக்கிட்டுப் போச்சாங்றதை விசாரிக்கல்ல தெரியணும்."

—தேசானந்தருக்குக் கோபம் வந்துவிட்டது! "நல்லாருக்கையா கதை! ஒங்க பையன் மகாயோக்கியன்ல! எங்க தங்கைதான் இழுத்துப் போயிருக்கும்! ஏய்யா பேசுறீங்க! பிள்ளை வைத்திருக்கீங்களே, பிள்ளை!....போனாப் போகுதுண்ணு ஒம்ம மொகத்துக்காகய்யா ஜாமீன் குடுத்தேன்! இல்லேன்னா இந்தக் கழிசடைகளைப் பத்தி எனக்கென்னய்யா கவலை!"—எப்பொழுதும் இலக்கண சுத்தமாகப் பேசும் தேசானந்தர், ஆத்திரத்தில் சுதிகெட்டுப் பேசினார்.

"அது சரி! எல்லாம் கேட்டுப் பாப்பம்! ஏன் அவசரப்படுறீங்க!"—என்றார் மாசிலாமணி.

"அவசரப்படாமெ என்னையா பண்றது! இந்தப் பக்கம் மானம் போச்சு! அந்தப் பக்கம் ஜாமீன் போச்சு!" என்றார் தேசானந்தர்.

அவர் சூடாகப் பேசப் பேச, தன் பழக்கத்தை மீறி, மாசிலாமணிச் செட்டியார் பொறுமையாக இருந்தார். இறுதியில், "அந்தப் பயலை மீண்டும் பிடித்து ஜெயிலில் தள்ளாட்டா என் பேரு தேசானந்தன் இல்லெ!" என்று சபதம் கூறிவிட்டு வெளியேறினார். —(தொடரும்)

குணத்தில் சிறந்தது!

கண் மார்க்
புகையிலைப் பொட்டலம்
— தயாரிப்பவர்கள் —
பெஸ்ட் புகையிலை கம்பெனி
புதுக்கோட்டை.

மணத்திற்கும், மனத்திற்கும் தொடர்புண்டு

ஜூபிடரின்
அண்ணா பக்தி
JUPITER PERFUMERS
CITY M.S.T.V. NEETHI MOHAN, MADURAI.
எங்கும் கிடைக்கும்.

நானும் நடந்திருப்பேன் நடப்பாரைப் பார்த்திருப்பேன்

இது தோட்டத்து நிலம்; ஆகவே 'மானம்பாரி' நிலமல்ல மழை நோக்கித் தவம் கிடக்க. எனவே, கிணறு நிறையக் 'கெத்துக் கெத்தென்று' தண்ணீர் கிடக்கிறது. அதிலும் ஓடை ஓரத்து உரைக் கிணறு; ஒத்தைக்கமலை; ஒரு ஜோடிக் காளைகள் ஓடி ஓடி இறைக்கின்றன. அந்த மாடுகள் இரண்டும் மைலக்காளைகள்; மணிகள் இரண்டும் திருநெல்வேலி; குப்பிகள் இரண்டும் கும்பகோணம்; அவைகள் குட்டக்காளைகள், குறும்புக்காளைகள். களைப்புமின்றி, இளைப்புமின்றித் தண்ணீர் இறைக்கின்றன. அந்த மாடுகளை வடத்திலேறிப் பத்துகிறுன் ஒரு வாலிபன். அவன் கையிலே தார்க்குச்சி; தலையிலே லேஞ்சி; இடையிலே வேட்டி; இவைதான் அவன் கோலம். அவனுடைய 'முதுகு இரண்டும்' பலகை; முழிகள் இரண்டும் முட்டை; நெஞ்சோ நெடுமலை; அவன் தோற்றம் முழுவதும் 'வாலிபக் காளையின் தோற்றம்.'

இவன் தண்ணீரைத் 'திமுதிமு'வென, இறைக்கிறுன். அந்தத் தண்ணீர் வாய்க்காலிலே 'குபுகுபு'வெனப் பாய்கிறது. இது நேரவரைக்கும் ஒழுங்காகத்தான் தண்ணீர் இறைத்துக்கொண்டிருந்தான் ஆனுல் இப்போதோ...... அவன் விழிகள் எதையோ தேடுகின்றன! அவன் பார்வை எதையோ நாடுகின்றன!......அவன் அப்படிப் பார்ப்பதுதான் என்ன?... அதுவா?

பக்கத்துப் பாதையிலே பாவை யொருத்தி வருகிருள். அவள், சொன்னதோ அவன் செவியில் ஏறவில்லை! அவனே, நம் காதலி நடந்தாளே! நடந்து வந்தாளே! இந்த நடைக்கு ஈடு ஏது இந்த உலகத்திலே?...இவள்போல் இன்னெருத்தி நடப்பாளா? நடக்க முடியுமா?

நானும் நடந்திருப் பேன்
நடப்பாரைப் பார்த்திருப்பேன்
இந்தச் சிங்காரி நடைபோல
எந்தச் சீமையிலுங் கண்ட
தில்லே!

'என்னுடைய சிங்காரி, நடைக்கு, இந்தச் சில்லாவிலே இணையேது?...ஈடு ஏது? எனப் பெருமைப்படுகிறுன்! பெரு மகிழ்வால் பாடுகிறுன்.

'நடை'யைப் புகழ்ந்துவிட்டான்; இடையைப் பாக்கி வைப்பானு?... அதையும் அவன் விடவில்லை.

"இடுப்பு ஒரு பிடிதான்
இடை சிறுத்த ரதிகிளிதான்
மாலேப் பொருத்தம் வந்து
மாட்டுதடி உன்னுலே"

இதற்குக் 'குமரிப்பிள்ளே' கூறுவது:

ஈக்கி முத்தி இடைபெருத்து
'எழவட்டங்க' வயசு முத்திப்
பாக்கு முத்திப் பருவங்தப்பிப்
பார்க்க வந்தாலாகாதா?

வயசு முத்திவிட்டதே! வந்து பெண் பார்த்தாலென்ன? இதைச் சொல்லித்தான் தெரியணுமா? சொல்லாவொரு பாகமும் வெவ்வேறு விதமான கதைகள் சொல்லுதே!

மஞ்சள் ஒரு பலமாம்
மரிக்கொழுந்து இரு பலமாம்
கொண்டை ஒரு பரமாம்
கெண்டைவிழி இரு பரமாம்.

இத்தனையும்உனக்கிருக்கு இன்னும் பல இருக்கு; எனவேதான் எனக்குப் பிடிச்சிருக்கு 'கிறுக்கு'! ஆமாம்!

கிள்ளிய கொசவத்துக்கோ
கீழ்மடியின் வெத்திலேக்கோ
அள்ளிய தேமலுக்கோ
ஆசை கொண்டேன்
உன் மேலே!

அதெதுக்கு வெட்டிப் பேச்சு!

வெத்திலே போட்ட பிள்ளே!
'விருவிருண்ணு' வந்தபிள்ளே!
நாக்குச் சிவந்த பிள்ளே!
நாந்தாண்டி உன்புருஷன்.

இதைக் கேட்டதும், 'குயிற் குரலாள்' கோபம் கொண்டு கூறுகிருள். "புத்தியும் உனக்கிருக்கா? புருஷனென்றும் சொல்லலாமா? மாலே மாத்து முன்னே, மணவாளன் ஆவாயா? கருப்புக் கருத்தமுத்தே! கடலோரம் விளைந்த முத்தே! நீ 'கணவ'னென்ருல், என் கழுத்திலே தாலிக் கயிறெங்கே? கண்ணும் உனக்கிருந்தால் என் கழுத்தைக் கண்டேனும் சொல்லிவிடு."–என்று 'உப்பு'ப்போல் 'சடபுட'வெனப் பொரிந்து தள்ளிஞள்.

இப்படிக் கோபப்படுவாளென்று அவன் எதிர்பார்க்கவே இல்லே.

தங்கக் கரண்டகத்தைத்
தப்பாமல் தாலி கட்டேன்.

விளைச்சல் வீடு வந்ததுமே விரைவிலே கலியாணத்தைப் பற்றி முடிவு செய்வேன்."

"கரும்பை அறுத்து 'விலையாக்கினதுமே' நம் கலியாணத்தை முடித்துவிடுவோம். இது 'தட்டிக் கழிக்கிற' பேச்சல்ல; தாலி கட்டி முடிக்கிற பேச்சு!"

"இன்றைக்கு 'வளைந்து குழைந்து'தான் பேசுவே! காளைக்கு விளைந்து வந்ததுமே, 'பெட்டிப் பாம்பு'போல, அடங்கிப் பேசாமல் கிடப்பே!"

"இதென்ன நீ இப்படிப் பேசுருய்: என் நிலே எப்படி இருக்கு தெரியுமா?

வாடக் கொடிக் காலாம்
வடகொடிக்கால் வெத்திலே
யாம்
போடச் சிவக்குதில்லே
பொன்மயிலே! உன் மயக்கம்

இப்போதெல்லாம், வெத்திலே சிவப்பதில்லே; கஞ்சியோ ருசியுமில்லே; வேலையில் கவனமில்லே; இரவெல்லாம் தூக்கமில்லே. பச்சைக்கிளியாளே! கொச்சை மொழியாளே! கலியாணத்தைப் பற்றி ஏன் இவ்வளவு கவலே? இதை நான் எப்போவோ கேட்டுவிட்டேன், உங்கப்பாவிட்டே வந்து! ஆமாம்... நமக்குப் பொருத்தம் பொருத்தந் தாண்டி; உனக்கும் எனக்கும் 'ஏகராசிப்' பொருத்தம்

இந்தச் சிங்காரி நடைபோல எந்தச் சீமையிலுங் கண்டதில்லே!

கஞ்சிக் கலயமென்ன? கவலேயில்லா நடையென்ன? மிஞ்சிக்காலென்ன? மேனியெல்லாந் தேமலென்ன?...'அவள்'தான் இவனுக்கு 'முறைக்காரி'; அதாவது சொந்த 'அத்தை மகள்'. இவனுடைய உள்ளமெல்லாம்; அவளிடமே உறைவிடம்; இவன் மனமெல்லாம் அவள் மலரடியில்! எனவே, வேலையை விட்டு விட்டு, விரைத்து இவளேயே பார்க்கிறுன். 'குர்'ரென்று பார்ப்பதிலே இவனே விடக் குறைந்தவளா அவள்......? காதலன் நிலே கண்டாள் அந்தச் சிலே! கமலேயையும் விட்டு விட்டு, வேலையையும் விட்டுவிட்டு,'அவன்' நிற்கும் நிலேகண்டாள். அவனே, காதலியைக் கண்டுவிட்டான்; கட்டழகில் மூழ்கிவிட்டான்; வேலேயை வெறுத்துவிட்டான்;வேண்டாமென் றெண்ணி விட்டான்; அவளும் இதைக் கண்டுவிட்டாள்; எனவே பெண்டவளும் பாடுகிருள்:

ஓடையிலே கிணறு வெட்டி
ஒத்தைக் கமலே மாட்டி
காடைபோல மாடு கட்டி
கமலே பத்தும் மச்சானே!

சாலேயிலே நான் போகும் சமயத்தைப் பார்த்திருந்து வேலேயை விட்டு விட்டு விரும்பி நீ பார்க்கிருயே! இதனுலே என்ன லாபம்? இது உனக்குத் தெரியாதா? தட்டு வெத்திலே வழங்கித் தாலியும் கட்டிவிட்டால் 'நாலுபேர்போல நாமும் வாழலாமே?' இதைச் சொன்னுள் அந்த சொர்ணபிம்பம். ஆனுல் மல் தெரியாதா?...அள்ளிய தேமலுக்கே ஆசை கொண்டேன் உங்க மேலே; ஆசையுள்ள அத்தானே! அல்லல்பட்டேன் பாதி நாளே! வட்டுக் கருப்பட்டியே! வாசிக்கும் கிண்ணரியே! வைத்துவிடு கலியாணத்தை வைகாசி மாதத்திலே... என்ன மச்சான்...நானே, என்னென்னமோ சொல்லுகிறேன்; நீயோ, என்னேயே பார்க்கிருயே! என்ன அதிசயம் என்கிட்டே இருக்கு மச்சான்."

"இதென்ன நீ இப்படிக் கேட்டுவிட்டே! கோடானு கோடியழகும் குவிந்து கிடக்கு உன்னிடமே! மேகத்தின் வண்ண ஓவியமெல்லாம் உன் தேகத்தில் குடிகொண்டிருக்கு! உன் தேகத்தின் ஒவ்

எனவே அவள் கொண்ட கோபத்தைத் தணிக்கத 'தாசா'ப் பண்ணுகிருன்.

"வெள்ளிக் கரண்டகமே!
வேகமுள்ள சுண்ணும்பே!
கோர்வைச் சங்கிலியே
கோபமென்ன என்மேலே!"

"இந்தப் பேச்சுக்கொன்றும்குறைவில்லே. 'அதாக்கும் இதாக்கும்', 'ஆச்சா போச்சா' என் மூச்சே நீயே"–என்று சொல்லுவாய். 'தாலி போடு என்ருலோ' – 'படத்'தைக் கிழே போடுவாய்!

தங்கக் கரண்டகமே!
சத்தமுள்ள வெண்கலமே!

பொருத்தந்தாண்டி; உங்கப்பன் கிட்டே கேட்டுட்டேன்;உங்கம்மா கிட்டே கேட்டுட்டேன்; உனக்கின்னும் 'நகை' பல செய்துபோட, ஒப்பந்தமும் போட்டுட்டேன். இனிமேல், 'தாலி கட்ட' வேண்டியது ஒண்ணு' தான் பாக்கி இருக்கு!"

"கட்டிக் கரும்பே! நீயே! கற்கண்டுத்துண்டே! நீயே! காலமெல்லாங் காத்திருப்பேன் உனக்காக கனவிலும் நான் மறவேன்; இதை நினேவிலே நிறுத்திக்கொள்."

"இதெல்லாம் சரிதான்; எங்க தோட்டத்திலே 'எங்கப்பன்' என்னுடைய வருகைக்காகக் காத்திருப்பான். "கஞ்சி கொண்டு வருவாளே என் மகள்! ஆனுல் காணவில்லேயே இன்னும்; ஏனே வரவில்லேயே! ஏதற்கோ தெரியவில்லேயே" –என்று பலவாறு 'எங்கப்பன்' என்னவோ எண்ணியிருப்பான்... ஏய்! ஏய்-மச்சான்; 'பரக்கப் பரக்க' என்னேப் பார்க்கிருயே! உன்னுடன் பழகின நான் எங்கே போவேன்? எனவே, வேலேயை விட்டு விடாதே; விருப்பத்துடன் வேலே செய்யேன். ஏனென்ருல், விளைச்சல் வந்தால்தான் விரைவிலே கலியாணம் ......விவரம் புரியுதா?...சொன்னது தெரியுதா? சோலி' எனக்கிருக்கு, போய், வாரேன் – மச்சான்" –என்று பேச்சை முடிக்கும் முன்னே நடக்க ஆரம்பித்தாள்.

அவன்...?

—அ. பிச்சை

'தென்றல்'

15-12-56-ம் தேதி இதழிலிருந்து

கண்ணதாசன் எழுதும்

ஒரு மணிநேர நாடகங்கள்!

தேர்தல் சம்பந்தமானவை!—மேடைகளில் நடிக்க,
வசதியோடு, பாடல்களுடன் வெளிவரும்.

இனிய வசனம்... சுவையுள்ள கதைகள்!

தென்றல் :: சென்னை-6.

உலகம் பலவிதம்

பேனாவை எடுத்து எழுத நினைத்தால் காகிதம் இல்லை; காகிதத்தை எடுத்தால் பேனா இல்லை என்பது புதுமொழி. இந்தப் புதுமொழியைப் பொதுமொழியாக்க விரும்புகிறார்கள் இரண்டு முதலமைச்சர்கள். ஒருவர் ஆந்திர நாட்டின் அமைச்சர், சஞ்சீவி ரெட்டி. மற்றொருவர் பரிதாபத்திற்குரிய நமது தமிழ் நாட்டுப் 'பெருந்தகை' காமராசர்.

சித்தூர், திருத்தணி, ஓசூர் முதலிய பகுதிகளைப் பற்றி டிசம்பர் 10ல் சென்னையில் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று, ஆந்திர முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டி ஒப்புக்கொண்டிருந்தார் ஒரு வாரத்திற்கு முன்பு. இப்போது அவருக்கு என்ன வந்துவிட்டதோ தெரியவில்லை.

"10ந் தேதி பேச்சுவார்த்தை நடத்த எனக்குச் சௌகரியமில்லை. அந்தத் தேதியில் எனக்கு வேறு முக்கியமான வேலைகள் இருக்கின்றன. எனவே, பேச்சுவார்த்தைகளை 20ந் தேதி வைத்துக் கொள்ளலாம். 'இல்லை, மிகவும் அவசரம்' என்று சொன்னால், காமராசர் ஹைதராபாத்துக்கு வரட்டும். அங்கே பேச்சுவார்த்தை நடத்தலாம்" என்று கூறிவிட்டார்.

எவ்வளவு தூரம் பொறுப்பற்ற தன்மை, ஆந்திர அமைச்சரிடம் இருந்திருந்தால், அவர், மேலே சொன்ன 'புண்மொழி'யைச் சொல்லியிருப்பார். "எனக்குச் சவுகரியமில்லை, அவர் வேண்டுமானால் ஹைதராபாத்துக்கு வரட்டும்"—இது கர்வத்திலே பேசும் பேச்சாகத்தான் படுகிறது. அப்படியே பார்த்தாலும், இவருக்குச் சௌகரியம் என்றுமே கிடைக்கப் போவதில்லை. சமுத்திரத்திலே அலை எப்போது ஓய்வது? ஆள் எப்போது குளிப்பது? இவருக்கு சௌகரியம் எந்த யுகத்தில் ஏற்படப் போகிறது. தமிழ்நாட்டு அமைச்சர் அவருடன் எப்போது பேசி முடிவு காண்பது? பாவம்! காமராசரின் மேல் நமக்குப் பரிதாபம் தோன்றுகிறது அவரை இவ்வளவு தூரம் அலைக் கழிக்கச்செய்யும் ஆந்திர அமைச்சரை நாம் மனதாரத் திட்டுகிறோம். 'பெரிய தேகத்தை'த் திண்டாட விடுவது பெருந்தன்மையல்ல என்றும் குறிப்பிடுகிறோம்.

காமராசரைப்பற்றி ஆலோசிக்கும்போது நமக்கு அவர்மீது ஏற்படுகிறபரிதாபம் 'சடாரென' மறைகிறது. ஆந்திர நாடு பிரிந்த வேளையில், இங்கிருந்து அங்கே சென்று, அன்றைய விழாவில் கலந்து கொண்டு "ஆந்திர நாடு நீடூழி வாழ்க" என்று ஆசிச் சொல் சொன்னாரல்லவா? அதன் பயன்தான் இவர் நெடுந்துன்பம் அடைகிறார். இனியும் அடைவார் என்றுதான் தெரிகிறது.

பாவம்! ஆந்திர நாடு வாழ்க என்று சொல்லி வந்ததை எண்ணியாவது, ஆந்திர அமைச்சர் விரைவில் பேச்சுவார்த்தையை நடத்த முன்வரக் கூடாதா? சீக்கிரம் வாருங்கள் என்று காமராசரின் சார்பாக நாம் 'ஆந்திர அமைச்சரைக் கேட்கிறோம். இல்லாவிட்டால், காமராசர், 'நன்றி கொன்றவர்கள்' என்று ஆந்திரர்களை வாயால் அல்ல, மனதிலே சபித்துக் கொண்டிருப்பார். வாயால் திட்ட அவருக்குத் துணிச்சலேது!

இதிலே இன்னொரு வேடிக்கை ஏற்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தை மத்தியஸ்தம் செய்ய வடநாட்டிலிருந்து மந்திரி படாஸ்கர் 'இறக்குமதி'யாகப் போகிறாராம். அரசாங்கத்தின் 'செலவு மீட்டர்' கணக்கை அதிகமாகக் காட்டும். காட்டட்டும், காட்டட்டும்! அது தானே காங்கிரசாரின் உடநப்படியான கொள்கை!

★

மத்திய சர்க்காரில் உள்ள அதிகாரிகளுக்கும் சரி, மந்திரிகளுக்கும் சரி 'அற்புதமான' யோசனைகள் தோன்றுகின்றன. அவர்களது மூளை, கிளை கிளையாகப் பிரிகிறது.

சமீபத்தில் டெல்லி சட்டசபையில் விபசார ஒழிப்புச் சட்டம் நிறைவேறியது. விபசாரத்தை எப்படி அறவே ஒழிப்பது என்பதற்குச் சரியான திட்டங்கள் ஆட்சியாளரிடம் இல்லை. அதை விட்டுவிட்டு நடவாத யோசனைகளையும் — பைத்தியக்காரத்தனமான யோசனைகளையும் வைத்துக் கொண்டு மாரடிக்கிறார்கள்.

"விபசாரத்தை ஒழித்துக் கட்ட பெண் போலீஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை ராஜ்ய அரசாங்கங்கள் நியமிக்கும்" என்று டெல்லி சட்டசபையில், சட்டமந்திரி தத்தார் தெரிவித்திருக்கிறார்.

வேடிக்கையாக இருக்கிறது மந்திரிகளின் யோசனைகள்! ஆண் போலீஸ் அதிகாரிகளாலேயே விபசாரத்தை ஒழிக்க முடியவில்லை யென்றால் பெண் போலீஸ் அதிகாரிகள் என்ன செய்துவிடுவார்கள் என்று நமக்குப் நமக்குப் புரியவில்லை!

—தமிழ்ப்பித்தன்

வியப்பிலும் வியப்பு!

[இந்தக் கட்டுரையின் ஆசிரியர், 'தென்றல்' நடத்திய இலக்கியப் போட்டியில், பாராட்டப் பெற்ற நாடகத்தை எழுதியவர். "நான் பெற்ற செல்வம்" என்னும் திரைக்கதையை எழுதியவர். தமிழாசிரியர்; இளைஞர். ஆ-ர்]

"ஆகா! எவ்வளவு அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எத்தனை ஆழமான அகலமான நுட்பமான கருத்து! எண்ண முடியாத அளவிற்கல்லவா வண்ணம் பலமிளிர்கின்றன" என்றெல்லாம் மூக்கின்மேல் விரலை வைத்து வியப்படையும் படியாக எத்தனை எத்தனையோ பாடல்களைப் பைந்தமிழ்ப் புலவர்கள் பாடிப்பாடி மகிழ்ந்திருக்கிறார்கள். நம்மையும் மகிழ்வித்திருக்கிறார்கள்.

இதோ ஒரு நிகழ்ச்சி! புலவன் ஒருவன் உள்ளமெனும் கடலிலே தோன்றிய ஒரு அலை! அவனுடைய இதயமெனும் தோட்டத்திலே பூத்ததோர் எழில் மலர்!

காவிரி அன்னை களிநடம் புரிகின்ற சோழவள நாட்டிலே அரசன் அனைய இளைஞன் ஒருவன் வாழ்ந்தான். அவன்...! வீரத்தின் விளை நிலம்; விவேகத்தின் இருப்பிடம்.

ஒருநாள், மாலைநேரம், பரிசல் துறையை நாடி அவன் நடந்தான். பரிசல்துறையை அடைந்ததும் ஆற்றுப் பரப்பை ஒரு முறை பார்த்தான். அங்கொன்றும் இங்கொன்றுமாக ஓடங்கள் மிதந்துகொண்டிருந்தன. துறையை அடுத்து......! அவன் கண்கள் அசைய மறுத்தன. அவன் கண்ட காட்சி, கண்கள் அசைய மறுத்த காட்சி வேறு எதுவாக இருக்கமுடியும்! வண்ணப்படகிலே மங்கை ஒருத்தி வீற்றிருந்தாள். ஒருத்திதான்! ஓடத்திலே வேறு யாருமில்லை. அப்பொழுதுதான் அவள் ஓடத்தைச் செலுத்தத் தொடங்கினாள். அவளையே விழுங்கி விடுபவன்போல அவன் பார்த்தான். தன் உள்ளம் அவளையே வட்டமிட ஓடம் ஒன்றை நாடினான். ஓடத்தில் ஏறினான். ஓடம் முதலில் ஊர்ந்தது; பின்னர் நீரைக் கிழித்துக்கொண்டு பாய்ந்தது. அந்த நங்கை சென்ற ஓடத்தை நெருங்கியது நம்பி சென்ற ஓடம்.

அவள் தன் கரிய பெரிய விழிகளால் அவனைப் பார்த்தாள். வேல்தரும் வேதனை அந்த வீரனுக்குத் தெரியும். ஆனால் விழிதரும் வேதனை அவனுக்குப் புதிது!

எனினும் அந்தப் பைங்கொடியின் பார்வைதனை மீண்டும் பெறவேண்டும் என்ற எண்ணத்திலிருந்து அவனால் விடுபட முடியவில்லை. அவன் மீண்டும் பார்த்தான். அவளும் பார்த்தாள்.

பின்னர் பல நாட்கள் பரிசல்துறையிலே அவர்கள் சந்தித்தார்கள். காதல் அரும்பாகி, மொட்டாகி மலர்ந்தது. காதல் கருகவில்லை; கனிந்தது என்பதை உலகிற்கு அறிவிப்பவர்கள் போல மணம் செய்துகொண்டார்கள்.

இன்பம் அவர்கள் காலடியிலே மண்டியிட்டுக்கிடந்தது. ஆனால் இந்த நிலையே அவர்கள் சொந்த நிலையாக இருந்துவிடவில்லை. தேனே, கனியே, என்றெல்லாம் காதல்பண் பாடியவனுக்கு இப்பொழுது தேன் தெவிட்டியது, கனிகசந்தது. தலைவியை மறந்தான், இல்லத்தைத் துறந்தான். விலைமாதர் தம் வீடுகளே சதம் என நினைத்தான்.

ஒருநாள்! பூரண நிலவு பவனி வந்துகொண்டிருந்தது. தன் உள்ளத்திலே உவகை ஊற்றெடுக்க, விலைமாது ஒருத்தியை - விலையற்ற செல்வம், கலைபெற்ற பயன் என்று புகழ்ந்தான் - பூரித்தான். தன் அன்பின் அடையாளமாக, காதல் முத்திரையாக அவள் அழகிய மார்பிலே நகக்குறியை இட்டான்! வானத்தே தோன்றி வட்டமிடும் நிலவு காதல் உலகிற்குத் தன் எல்லையற்ற கருணையை நல்கியது. தலைவனைப் பிரிந்த தலைவிக்கு எல்லையற்ற தொல்லையைத் தந்தது. அவள் துன்ப வெள்ளத்திலே அழுந்தித் துடி துடித்துக்கிடந்தாள்.

இதுதான் நிகழ்ச்சி! இந்த நிகழ்ச்சிதனைப் புலவன் தன் உள்ளத்திரையிலே கண்டான். தலைவன் விலைமாதின் மார்பிலே நகக் குறியிட்ட செயலை நினைத்தான். வியப்பை அடைந்தான். அதன் பிறகு தலைவியின் வருத்தத்தையும் எண்ணினான். வியப்பிலும் வியப்பை...ஆம் பெரு வியப்பை அடைந்தான்.

தலைவன் விலைமாதின் மார்பில் நகக்குறியை இட்டான் (கிள்ளினான்). அதனால் ஏற்பட்ட வலியின் பொருட்டு வருந்த வேண்டியவள் விலைமகள். ஆனால் அவளோ மகிழ்வடைகிறாள். வியப்பாக இல்லையா?

தலைவனால் நகக்குறி இடப்பெறாத தலைவி, அதாவது தலைவனால் துன்புறுத்தப் பெறாத தலைவி மகிழவேண்டும். ஆனால் அவள் துன்பப்படுகிறாள். பனைமரத்திலே தேள் கொட்ட தென்னைமரத்திலே நெறிகட்டுவதுண்டா? விலை மகள் மார்பிலே அவன் நகக்குறியை இட, குலமகள் ஏன் வருந்தவேண்டும்? இவர்கள் இருவரும் உருவத்தால் இருவர் எனினும் உயிரால் ஒருவரோ?

இதைக் காணும்போது வியப்பினும் வியப்பாக இல்லையா? புறஉலகிலே துன்பம் தருவனவாகக் கருதப்படும் சில, அக உலகிலே (காதல் வாழ்விலே) இன்பமே தரும்.

பாட்டைப் பாருங்களேன். இனிமையான எளிமையான அருமையான பாடல்!

"வேறொரு மாதர்மேல் வேந்த னகநுதியால்
ஊறுதர இம்மா துயிர்வாடும்—வேறே
இருவரே மெய்வடிவி னேந்திழை நல்லார்
ஒருவரே தம்மி லுயிர்.

(தண்டியலங்கார உதாரணப் பாடல்)

—நாக சண்முகம்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நாடு